No. M. 1630. DECEMBER & JANUARY 1923, 24.

சுயம்பிரகாசத்துணை.

ஸம்ஷுல் மஹறிபா என்னும்

# ஞானசூரியன்

இது ஒரு நிகரில்லாத இனிய மாத சஞ்சிகை.

# GNANA SURIYAN

A HIGH CLASS TAMIL MONTHLY.

மலர் 2.] உருத்திரோற்காரி௵ மார்கழி௴ தை௴ 1௳ [இதழ் 9 10

Vol. II. No. 9, 10.

பொருளடக்கம்.

| விஷயம். | பக்கம். |
|---|---|
| கடவுள்வணக்கம் | 193 |
| சீவன்முத்தர்களிலக்கணம் | 194 |
| முயற்சி | 198 |
| கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் | 202 |
| சாதுசங்க விசாரணை | 209 |
| வைத்தியம் | 213 |
| கடவுள்வணக்கம் | 217 |
| அடியார்நிந்தை | 218 |
| காலையில் எழுந்திருத்தல் | 223 |
| முன்னுக்கு வருவதெப்படி | 227 |
| முகம்மதுநபிசரித்திரம் | 230 |
| வைத்தியம் | 232 |
| கச்சியப்பமுனிவர் | 237 |

இப்பத்திரிகையிலுள்ள விஷயங்களை பத்திராதிபர் அனுமதியின்றி எவரும் பிரசுரிக்க அருகரல்லர்.

# "ஞான சூரியன்"

## சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு | வருடம் 1-க்கு தபால்கூலி உள்பட | ரூ. 1—8—0 |
| பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளுக்கு | | ரூ. 2—0—0 |
| தனி சஞ்சிகை விலை | | ரூ. 0—3—0 |

மாதிரிப்பிரதி வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் உடனே இனாமாக அனுப்பப்படும்.

சந்தாதாரர்கள் சந்தா நம்பரைக்குறித்து எழுதினாலன்றி கடிதங்களுக்கு விடை யளிக்கப்படமாட்டாது.

சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் வி.பி.யிலனுப்பும்படி ஆர்டர்செய்யலாமேனும் முன்பணம் அனுப்பிவிடுவதே உத்தமம். ஏனெனில் மணியார்டர் செய்தால் ரூ. 1—8—0. வி. பி. யில் ரூ. 1—11—0 ஆகும். அதனால் தங்களுக்கு 3 அணா சகாயமிருக்கிறது. முதல் சஞ்சிகையிலிருந்து விஷயங்கள் தொடர்ச்சியாய் எழுதப்பட்டுவருவதால் யாவரும் ஆரம்பத்திலிருந்தே சேர்ந்து வருகிறார்கள். சந்தா தொகை ரூ. 1—8—0 சித்திரைமீ முதல்கொண்டு பங்குனி-மீ வரையில் கணக்கு வைத்துக்கொள்ளப்படும். இடையில் சந்தாதாரராய்ச் சேருபவர்களுக்கு சித்திரைமாதப் பத்திரிகைமுதல் சேர்த்து அனுப்பப்படும்.

---

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ஒருமாசத்திற்கு ... | ரூபா | 7—0—0 |
| அரை பக்கத்திற்கு | ,, | ,, | 4—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ,, | 2—8—( |

மொத்தமாய் ஒரு வருடத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டால் மொ[illegible] தொகையில் 100-க்கு 12½ நூ வீதம் கழித்து வாங்கப்படும். எப்போ[illegible] முழுதொகையை முன்பணமாயனுப்பவேண்டும். நீடித்த விளம்பரங்களுக[illegible] மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

## விஷயங்கள்.

1. கடிதக்காரர்கள் அபிப்பிராயங்களுக்கு பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

2. விஷயம் அனுப்புவோர் கடிதத்தின் ஒரே பக்கத்தில் இங்கியால் தெளிவாய் எழுதியனுப்பினாலன்றி, அவ்விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா.

3. விஷயங்களை திருத்தவும், அவற்றில் கூட்டவும், குறைக்கவும், அவற்றைவெளியிடவும் வெளியிடாமலே விட்டுவிடவும் பத்திரிகாசிரியருக்கு பூரண சுதந்திரமுண்டு. பதில் தெரிய விரும்புவோர் தபால் முத்திரை அனுப்பவும்.

முன்பணமாக ரூபாய் 25 (இருபத்தைந்து) செலுத்தும் ஜீவிய சந்தாதாரர் (Life Subscribers) கட்கு எக்காலத்திலும் பத்திரிகை இனாமாக அனுப்புவதுடன் அவர்கள் பெயரை ஒவ்வொரு பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பெறும்.

கருணையானந்த ஞானபூபதி,

பத்திராதிபர், ஞானசூரியன் ஆபீஸ்,

விஜயபுரம், திருவாரூர்.

சுயம்பிரகாசத்துணை.

ஸம்ஷுல் மஹறிபா என்னும்

# ஞானசூரியன்.

இது ஒரு இனிய நிகரில்லாத மாதப் பத்திரிகை.

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (தமிழ் வேதம்)

(All Rights Reserved.)

மலர் 2.] ருத்ரோற்காரிஞு மார்கழிமீ 1உ 1923ஞு டிசம்பர்மீ 16உ [இதழ் 9.

## கடவுள் வணக்கம்.

தேனெனத் தமிழ்சொல் கருணையானந்த
தேசிக வுட்சிதா காய
ஞானசூ ரியன்வந் துதித்தொளி விரிப்ப
நானிலத் துதித்தமா னிடர்கள்
நானெனு மகந்தைக் காரிருட் படலம்
நலிந்தவ ருளமலர் விரியச்
சோனைபோ லருள்செய் சுயம்பிர காசச்
சோதியைப் போதெலாந் தொழுவாம்.

(பத்திரிகாசிரியர்.)

உரையால் நினைவால் அருள்நோக்கால் உலக ருணர்வைப் பிணித்தமல
இருளா னதனை அறமாற்ற எழுந்த ஞான சூரியனே. (பிரபுலிங்கலீலை)

தானான தன்மயமே யல்லா லொன்றைத்
தலையெடுக்க வொட்டாது தலைப்பட் டாங்கே
போனாலுங் கர்ப்பூர தீபம் போலப்
போயொளிப்ப தல்லாது புலம்வே றின்றி
ஞானாகா ரத்தினொடு ஞேய மற்ற
ஞாதுருவு நழுவாம னழுவி நிற்கு
மானாலு மிதன்பெருமை யெவர்க்கார் சொல்வா
ரதுவானா லதுவாவ ரதுவே சொல்லும்.

(தாயுமான வள்ளல்.)

# ஞான சூரியன்

## இது ஒரு நிகரில்லாத மாத சஞ்சிகை.

### சீவன் முத்தர்களிலக்கணம்.

(126-ம் பக்கத் தொடர்ச்சி.)

#### அத்துவிதவுண்மை.

சொருபம்நாமேயெனத்திடமாய்த்துணிந்தபேர்களில்லறத்தை
மருவிநீங்காதிருந்திடினும்மற்றோர்குறையுமவர்க்கில்லை
சொரூபம்நாமேயெனத்திடமாய்த்துணியாதவர்களில்லறத்தை
ஒருவிநீங்கினதுகொண்டேயுளதோமுத்திபவமறுமோ.

புலாலையே அதிக பிரியமாகப்புசிக்கும் பூனையானது, இனிப் புலாலைப் புசிப்பதில்லையென்றும், கொல்லாவிரதத்தை யனுசரித்திருக்கின்றேன் என்றும் உருத்திராக்கம் கட்டிக்கொண்டாலும் அதன் இயற்கையான தொழிலையொருபோதுங்கைவிடாதென்பதுயாவரும் அறிந்த விஷயம். முன்னொரு காலத்தில் ஒரு பூனையானது எலிக்குஞ்சுகளை நிர்மூலம் பண்ண நினைத்து தாயெலியிடத்திற் போய், இதோ! பார்! உருத்திராக்கம் கட்டியிருக்கிறேன். 'இனி சீவவதை செய்ய மாட்டேன்' என்று சத்தியஞ் செய்து கொடுத்து, தாயெலியில்லாத சமயம் பார்த்து நாளுக்கு நாள் ஒவ்வொரு குஞ்சாகப் பிடித்துத் தின்று விட்டதென்று பற்பல கதைகளுண்டு. ஆகையால் பூனையின் விரதம் வெளிவிரதமேயன்றி உண்மையான விரதமல்ல. சாகபக்ஷணியாகிய ஆடுமாடுகள், மாமிசத்தினிடையே நிற்பினும் அவை அதை ஒருபோதும் புசிப்பதில்லை. பன்றியானது மலம்புசிப்பதை விட்டிருந்தாலும் மேல் நிலைமைக்கு வராது. பசுவானது மலம் முதலியவைகளைத் தின்றாலும், விக்கிரக ஆராதனையுடையவர்களால் பூசி

க்கப்படும் பெருமை வாய்ந்திருப்பதுடன் இனிய பாலைத்தரும் காமதேனு என்று சொல்லும்படியான தெய்வப் பசுவாக விளங்குகின்றது. அவைபோல் கடவுளிடத்தில் அன்பில்லாத பாசாண்டிகளாகிய வேஷாண்டிகள் வனிதாதி போகபோக்கியங்களை வெறுத்து, (புலியானது புல்மேய வருகிற பசுக்களைப் பிடித்துத் தின்ன தானும் பசு வேடம் போட்டு நிற்பது போல்,) காவி வஸ்திரம் தண்டு கமண்டல தாரியாய் நிற்பதில் பிரயோசனமில்லை. அறிவின் மிக்கோர் வனிதாதி போகங்களுக்கிடையே செறிந்திருப்பினும் அறிவுடையோர்களால் பூசிக்கப்பெற்று வாழ்வார்கள்.

சிவஞான வள்ளல்.

நல்லாரைப் போன்றிட் டிருப்பினும் வஞ்சகர் நல்ல ரல்லர்
பொல்லாரைப் போன்றிட் டிருப்பினும் நல்லவர் புண்ணியரே
உல்லாசமாய் மலர் கொண் டெறிந்தா னன் றுருவழிந்தான்
கல்லாலெறிந்தவன் முத்தி பெற்ருன் கச்சியேகம்பனே.

நீதி வெண்பா.

கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கற்பூர மாமோ கடலுப்பு—பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ புகல்.

மூதுரை.

அட்டாலும் பால்சுவையிற் குன்ரு தளவல்ல
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்—கெட்டாலும்
மேன்மக்கள் மேன்மக்களேசங்கு சுட்டாலும்
தான்மிக்க வெண்மை தரும்.

பிருதிவி முதல் நாத மீருயுள்ள(*) முப்பத்தாறு தத்துவங்களின் மேற்பட்டிருக்கும் பிரம்ம சைதன்னியத்தின் திருவருளை

---

(*) 36 தத்துவங்களாவன :—ஆன்ம தத்துவம்-24. வித்தியா தத்துவம்-7. சிவதத்துவம்-5. ஆக தத்துவங்கள்-36. இந்த முப்பத்தாறு தத்துவங்கட்கும் மேற்பட்டு (அதீதமாய்) இருப்பதுவே ஆன்மா என்னும் பிரமம். தத்துவம் 36-ம், ஆன்மாவுக்கு விடய ஞானம்: ஆன்மா என்னும் பிரம்மமல்ல. ஆன்ம தத்துவம் நட்சத்திரங்களைப்போலும் வித்தியாதத்துவம் சந்திரனைப்போலும் சிவதத்துவம் சூரியனைப்போலு முள்ளது. காட்சி கண்ணையறியாததுபோல் இக்கருவிகள் 36-ம் ஒன்றையொன்றறியாமலும் தத்தங்குணங்களைத் தாமேயறியாமலும் ஆன்மாவையறியாதிருக்கின்றன. ஆகையினலேயே இத்தத்துவங்கள் ஆன்மாவுக்குப் புறம்பாகவிருக்கின்றன.

யடைந்த மெய்ஞ்ஞானிகள் குடும்பிகள்போலிருப்பதை பஞ்சேந்திரியங்களென்னும் அதிகாரியின் கட்டளைப்படி ஊழியஞ்செய்யும் அடிமைகளாகிய சில பிரபஞ்சத்தவர்கள் கண்டு, இவரும் நம்மைப் போன்ற குடும்பஸ்தர்தான். அவரும் மனிதன் நாமும் மனிதன். அவரும் குடும்பியாகத்தானிருக்கிறார். நாமும் குடும்பியாகத்தானிருக்கிறோம் என்றெண்ணி அவர்கள் சில கிரியைகளை செய்யாவிட்டால் நிந்திப்பது எப்படியிருக்கிறதெனில் திருப்பாற்கடல் நடுவில் பன்னக சயனத்தில் யோக நித்திரை செய்து கொண்டிருக்கும் மகாவிஷ்ணுவை நோக்கி, அக்கடலில் வசிக்கும் தவளையானது 'ஹே! பெருமாளே! நீரும் இந்தப் பாற்கடலிலே மிதந்து துயில்கின்றீர். நானும் இந்தக்கடலில் மிதந்து துயில்கின்றேன். உமக்கும்(*) அரி என்று பெயர். எனக்கும் அரி என்று பெயர். ஆதலால் நாம் இருவரும் ஒரே தன்மையுடையவர்களாயிருந்தும், நீர் என்னைப்போல் ஓடி ஆடித் திரியாத காரணமென்னவென்று கேட்டதை நிகர்க்கும்.

### அத்துவிதானுபவம்.

சகலமறிந்தாசையில்லாமெய்ஞ்ஞானிஎத்தொழில்கள்தான்செய்தாலும்
மிகசாம்பிராச்யமுதற்பரமபதத்துள்ளசுகமெல்லாஞ்சேர்வான்
அகல்கருமம்ஒன்றுண்டோஇரண்டுண்டோபிறவியுண்டோஅவித்தை [யுண்டோ
சுகமயமோமெய்யறிவோசற்குருவோஅவன்மகிமைசொல்லொண்ணுதே.

பூமியின்கண் ஒருபொருளைப் புதைப்பதற்கும் புதைத்த பொருளை யெடுப்பதற்கும் பூமியையே தோண்டுவார்கள். ஒரு குழந்தை தூங்குவதற்கும் விழிப்பதற்கும் தொடையையே தட்டுவார்கள். அவைபோல் குடும்பத்திலிருக்கின்ற மெய்ஞ்ஞானி தன்மனைவி முதலிய குடும்பத்தினர்கள் வந்து எழுப்பும்போது அகமுகமாய்த் தற்போத ஒழிவில் நிலைநின்று ஆனந்தநித்திரை

---

* அரிஎன்று விஷ்ணுவுக்கும் தவளைக்கும் பெயர். இன்னும் 63 பொருளுக்கும் பெயருண்டு அவற்றைப் பார்க்க விருப்பமுள்ளவர்கள் பொருளகராதியிற் பார்த்துணர்க.

பண்ணுவார், அஞ்ஞானிகள் தன்மனைவி முதலிய குடும்பத்தினர்கள் வந்து சருவுந்தோறுஞ் சகமுகமாய் நின்று மதுவுண்ட வண்டைப்போல் மயங்கிக் கிடப்பார்கள். ஆகையால் படிக மணியிற் பற்றுகின்ற பஞ்சவர்னம் மாணிக்க மணியிற் பற்றாத தன்மைபோல் குடும்ப வாசனையில் அஞ்ஞானிகளுக் கிருக்கும் மயக்கம் மெய்ஞ்ஞானிகளுக்கு இருக்கமாட்டாது. இதை நிதானித்து ஆராய்ந் துணர்பவர்களுக்குத் தெரியாமலும் போகாது.

மதமேறுதற்கு முன்னும் சிறப்புவாய்ந்த யானையானது, கன்னமதம்-கபோலமதம்-கைமதம் என்னும் மும்மதங்கள் ஏறின பின் தடைகடந்து சஞ்சரித்தாலும், மேன்மேலும் அதிக சிறப்பேயன்றி அதை இழிவாகச் சொல்லுபவரில்லை. அதைப்பார்த்து எப்போதுமே கீழ்வகுப்பாக எண்ணப்பட்ட நாயானதுதானிருக்க வேண்டிய வரன்முறையைக் கடந்து தடைமீறினால், இந்த நாய் பயித்தியம் பிடித்திருக்கிறதென்றெண்ணப்பட்டு பலபேர்களாலும் அடி-உதை பெற்றுச் செத்துப் போகும். அதுபோல் மெய்ஞ்ஞானிகளானவர்கள் வரன்முறை கடவாதிருந்தபோதுஞ் சிறப்புப் பொருந்தினவர்கள். ஆதலால் அவர்கள் ஆனந்த மேலிட்டால் வரன்முறை கடந்தபோதிலும் இன்னும் அதிக மாட்சிமையாகக் கொண்டாடப் படுவரே யன்றி ஒருவராலும் இழிவாகச் சொல்லப்பெறார் என்பது அறிவுள்ளோர் நன்கறிந்த விஷயம். அதைப்பார்த்து பிரபஞ்ச வாழ்க்கையைப் பொருந்திய கன்மியானவன் நிலைகடவாத முன்னும் ஞானிகளுக்கு இழிவாயுள்ளவனாயிருந்தும் தற்போதச் சேட்டையினால் தானிருக்க வேண்டிய வரன்முறையைக் கடந்து நின்றால் இன்னும் அதிக இழிவைப் பெற்றுப் பலராலுந் தூஷிக்கப் படுவானேயன்றி மாட்சிமை பெறமாட்டான். ஆதலால் ஞானிகள் தடைமீறினாலும் குடும்பஸ்தன் தன்னுடைய நிலையிலிருந்து மீறிநடக்கக்கூடாதென்னுங் கருத்தையடக்கி,

கண்ணுடைய வள்ளல்

ஆனைமதப்பட்டால் அலங்கார மன்றிநாய்
தானுமதப்பட்டாற் சரியாமோ—ஞானி

தடைமீறினுலுஞ் சதிராகுங் கன்மி
கடைமீறலாகாது காண். என்றுகூறினர்.

## முயற்சி.

### திருக்குறள்.

“உடையரெனப்படுவ தூக்கமஃதில்லா
ருடையதுடையரோ மற்று”

அதாவது ஒருவரை உடையவரென்று சொல்வது அவரது மனவெழுச்சியாகிய முயற்சியைக் கொண்டே சொல்லவேண்டும் அம்மனவெழுச்சி யில்லாதவர் யாதுமில்லாதவர் என்பதாம்.

உலகத்தில் தகுந்த முயற்சியின்றி எக்கருமமும் நிறைவேறும் என்று எதிர்பார்க்க முடியாது. நாம் மேற்கொள்ளும் சிலகருமங்கள் முதலில் நிறைவேற்ற முடியாதன வாகவே தோன்றலாம். ஆயினும் அதனாலேயே மனத்தளர்ச்சி யடைதல் கூடாது.

“மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையுமேற்கொள்ளார்—செவ்வி
யருமையும் பாராரவமதிப்புங் கொள்ளார்
கருமமேகண்ணயினர்” என்றபடி

நாம் மேற்கொண்ட கருமம் சித்திபெறுவதிலேயே நோக்கங் கொண்டு தாழாது உஞற்றுவோமாகில் எவ்விதத்தினும் அக்காரியத்தை நிறைவேற்றுவோம் என்பது திண்ணம்.

நமது முன்னோர்களிலும் இன்னும் உலகசரித்திரத்தில் பெரும்புகழ் பெற்று விளங்கியவர்களிலும் அனேகர் சரித்திரத்தை நோக்குவோமாயின் அவர்கள் எவ்வித எளியநிலைமையிலிருந்தபோதிலும் அவரது தளராவூக்கத்தினாலேயே பலவித அரியபெரிய காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பது உணர்வோம்.

சைவசமய குரவர்களுள் ஒருவராகிய ஸ்ரீ திருநாவுக்கரசு நாயனர் கைலாயகிரிசென்று சிவபெருமான் தெரிசனங்காணக்

கருதிச் செல்லவும் இடையில் பலஇடையூறுகள் ஏற்பட்டு ஆக்கை தேய்ந்து மெலியினும் ஊக்கம்தேயாமல் தமது கருத்தை நிறைவேற்றிய வரலாறு யாவருமறிந்தது. மற்றும் துருவன் வயதிற் சிறிய இளைஞனயினும் பெருமுயற்சிகொண்டு தவமுனுற்றவும் அவனது வைராக்கியத்தைப் பகவான் சோதிக்குமாறு விடுத்த இன்னல்கள் யாவையும் திரணமாய்க்கருதி விடாமுயற்சியோடும் நின்று என்றுமழியா உன்னத பதவியடைந்ததும் அறிவோம்.

தற்காலத்தில் செல்வத்திலும் கல்வியிலும் புகழிலும் பலத்திலும் மிகுந்துவிளங்கும் ஒவ்வொரு ஜாதியாரும் எவ்வாறு முன்போந்தார் என்பது கருதுவோமாகில் அவரது தளரா ஊக்கமே அடிப்படியான காரணம் என்பது புலனும்.

கொலம்பஸ் என்பவர் தாம் ஒருபுதிய பூபாகத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டு அருமையாகப் பெற்ற ஒருகப்பலையும் சிலதுணைவர்களையும் கொண்டு கடலில் நாள் பலவாகப் பிரயாணம் செய்தும் புதியபூபாகம் ஒன்று கண்படும் என்பதற்கு அறிகுறியொன்றும் தென்பட்டதில்லை. அவருடன் சென்றோர் யாவரும் அவ்வித நெடியகடற்பிரயாணத்தால் வெறுப்படைந்து அவரைக் கடலிற்றள்ளிவிடவும் ஆரம்பித்தனர். இந்த நிலைமையில் கொலம்பஸ் துரைமகனர் பத்திரமாய்த் தம்நாடு திரும்ப எண்ணங் கொண்டிருப்பாராயின் அவரைச் சிலாகித்துப் பேசுவாருமுண்டோ? தமதுகாரியத்திலேயே கண்ணுங்கருத்துங் கொண்டு தளரா ஊக்கமுடையவராயிருந்தமையால் வெறுப்படைந்து குழப்பமுற்ற தமது துணைவர்களையும் ஊக்கமுறச் செய்து கடைசியில் தமது கருத்தை நிறைவேற்றினர். அவரது ஆச்சரியமான விடாமுயற்சியானது என்றுமழியாப்பயனும் புகழுமளித்ததன்றோ?

மற்றும் ஸ்டான்லி முதலியோர் புதிய கண்டங்களைத் திறவு செய்வதற்கும் அக்கண்டங்களுக்கு வழிகள் கண்டுபிடிப்பதற்கும் புகுந்து உழைக்கவும் அவர்வழியெழுந்த இன்னல்கள்பல கடலிற் கிரையாகுவோர் பலர். நாட்டை அடைந்தும் அங்குள்ள காட்டு

பிருகங்களுக்குக்கிறையாகுவோர்பலர். தேசங்களின் சீதோஷ்ண ஸ்திதியின் மாறுபாட்டால் பலவிதநோய்களுக்கிரையாகுவோர் பலர். ஆயினும் எஞ்சியவர் சிறிதும் மனத்தளர்ச்சி யடையாமல் உழைத்ததனுலன்றே அவர் இறந்துபட்டு ஆண்டுபல செல்லினும் உலகசரித்திரத்தில் இன்னும் பிரபலமனுஷ்யர் களாகப் போற்றிப் புகழப்படுகின்றனர்.

ஆகவே முயற்சியால் நிறைவேற்ற முடியாதகருமம் ஒன்று மில்லை என்னலாம். நிற்க, சிலர்விதியிருந்தால் யாவும் கைகூடும் என்று வேதாந்தம் பேசுவர். ஒருவனுக்கு விதியின் பயனுல் யாவும் அமையப்பெற்று தங்கக்கிண்ணத்தில் உணவு பரிமாறப் பற்றியிருக்கிறது. அதை உண்பதற்காயினும் சிறிது முயற்சி வேண்டுமன்றோ? அதுவும் விதியின் செயலாகுமோ? அவ்வா ருயின் கருணுகரனுகிய கடவுள் நமக்கு வேண்டிய அவயவங் களையும் அறிவையும் எதற்காக அளித்தான்? சகோதரர்களே! இவ்வாறு கூறுவதால் நாம் ‘ விதி ’ யென்பதொன்று இல்லை யென் பதில்லை. எவ்வித முயற்சி செய்தாலும் இடையில் பல எதிர் பாராத இடையூறுகள் ஏற்பட்டு ஒருகருமம் சித்தியாதுபோ மாகில் அதையே விதியின் செய்கை யென்னலாம். ஒருவர் பி. எ., பட்டம் பெற விரும்புகிறுர், விரும்பி விதியிருந்தால் கிடைக்கும் என்று வாளாயிருந்தால் எவ்வாறு அப்பட்டம் பெற முடியும். ஆங்கிலவாசகசாலைசென்று ஆகவேண்டிய பாடங்களைக் கற்று உயர்தரக் கலாசாலையில் நடக்கும் பரீக்ஷையில் தேர்ச்சி யடைந்தாலன்றோ பட்டம் பெற்று உத்தியோகமும் பெறலாம் வாசித்தும் பரீக்ஷையில் தேர்ந்தும் உத்தியோகம் கிடைக்கா விட்டால் அதை விதியின் செய்கை என்னலாம்.

குசேலோபாக்கியானம்

செய்த்தகு முயற்சி செய்திடில் செய்யிர்தீர்
செய்யவள் மணுளனுமிரங்கி
வியத்தகவேண்டும் யாவையுமளிப்பன்
விளம்புறுமுயற்சி செய்யானேல்
நயத்தகுபோகம டைந்திடானென்றே
நானிலத்தறிஞர் நன்குரைப்பர் ”

ஆகையால் நாம் நம்மாலியன்ற அளவு ஒரு கருமத்தை முடிப்பமுயன்று அக்கருமம் சித்திபெறுமாறு கடவுளின் அருளை யெதிர்பார்க்க வேண்டும். அஃதன்றி சோம்பேறித்தனமாக வாளாயிருந்து கருமம் சித்திபெறாதவழி தெய்வத்தின்பேரில்பழி சாற்றுவதால் என்னபயன். அறிவீனமன்றோ?

எதற்கும் 'விதி' 'விதி' என்று வாளாயிராமல் அவரவர் தம்மாலியன்ற அளவு மனந்தளராமல் உழைக்கவேண்டும் என்பது பற்றியே நம் ஞானத்தடங் கடலாகிய திருவள்ளுவனார்,

"தெய்வத்தானு காதெனினு முயற்சிதன்
மெய்வருந்தக் கூலிதரும்" என்றும்

"ஊழையுமுப்பக் கங்காண்பருலை வின்றித்
தாழாதுஞற்றுபவர்"

என்றும் திருவாய் மலர்ந்தருளி யுள்ளார்.

இந்தியர்களாகிய நாம் நமது புராதனமாகிய பெருமையை யிழந்து அடிமைப்பட்டு ஒதுங்கிக் கிடப்பதற்கு நமது முயற்சி யின்மையே காரணம். நமது முன்னோர்களும் நம்மைப்போல் முயற்சியற்ற வீணர்களாயிருந் திருப்பாராயின், பாரதநாடு புராதன நாகரீகம் வாய்ந்ததென்று சொல்லவும் இடமுண்டோ? கேவலம்! அற்பமான லோககாரியங்களைச் செய்து முடிப்பதற்கே முயற்சி செய்வது நமக்கு அருமையாயிருக்க, மயக்கத்திற்கிடமாகிய உலக இன்பங்களை யெல்லாம் விடுத்துக் கடுமையான தவமுஞற்றுதலுக்கு எவ்வித வைராக்கியம் வேண்டும். இங்கு,

வஞ்சவேல்கொடுமோர் பிலெறியினும்
விஞ்சவேதழல் மீட்டியெரிக்கினும்
நஞ்சினாழஞகை நலியினும்
அஞ்சிடாதவரா நந்தமாவரே

என்றுங் குணங்குடி வள்ளல் வாக்கு கவனிக்கத்தக்கது.

நமது முன்னோர்களது பெருமையைப் பற்றியே சிலாகித்துக் கொண்டிருப்பதால் பயன் என்ன? நம் முன்னோர்கள் அவ்வளவு பெருமன வூக்கமுடையவராய் அரிய காரியங்களைச் செய்து நமது பாரதநாடு அறிவுவள முடைத்து' என்று உலகர் புகழ விளங்கி

யிருக்கவும் அவரது சந்ததியாராகிய நாம், தற்காலத்தில் மற்றும் சில சாதியார் மேம்பட்டு விளங்கவும், அடிமை யென்னும் படு குழியில் வீழ்ந்துழல்வதை நினைத்து ஆண்மைமிக்கு வீராவேசம் கொண்டு சித்தவைராக்கியராய் மென்மேலும் நாமும் முன்வர வேண்டும் என்று எழுந்து உழைப்பதன்றோ அழகு. அஃதன்றோ ஆண்மை. அப்பொழுதன்றோ நமது முன்னோர் கீர்த்தியை நிலைநாட்டுபவர்களாவோம் அவர்களுக்கு நன்றி காட்டுபவர்களாவோம் நமது அன்னையாகிய பாரதமாதின் மனவருத்தத்தையும் நமது அடிமையையும் ஓட்டுபவர்களாவோம்.

சகோதரர்களே! கொள்ளத்தகாதவற்றைப் பரிந்து கைக்கொள்ளுதலும், தகுவனவற்றை நீக்குதலுமாகிய நமது அறிவீனத்தைக் குறித்து இங்கு நாம் மனமுறையாமல் இருக்க முடியவில்லை. நமது முன்னோர்கள் கைக்கொண்டு பெருமையடைந்த பல அரிய கொள்கைகளை யெல்லாம் வீண் கர்நாடகக் கொள்கைகள் என்று இழித்துக் கைவிட்டோம். அவர்களைக் காட்டிலும் நாம்மிகுதியும் திருத்தமடைந்து விட்டதாக எண்ணிக் கொண்டோம். அந்தோ! என்னே நமது அறிவீனம்! மேல் நாட்டாரிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டியது ஒற்றுமை, தேசாபிமானம், பாஷாபிமானம், விடாமுயற்சி முதலிய அரிய கொள்கைகள். அவைதவிட்டு ஒவ்வொருநாளும் புதிது புதிதாகத் தலைமயிரைக் கத்தரித்துக்கொள்வதிலும், கால்மீசை அரைமீசை வைத்துக்கொள்வதிலும், உயர்ந்த பானவகைகளைச் சாப்பிடுவதிலும் அதிகமாக விருத்தி செய்து கொண்டோம். இவ்விதமாக நாம் விபரீதமான புத்திகொண்டதே நமது சிறுமைக்கும் வறுமைக்கும் காரணம் என்பதை நமது சகோதரர்கள் அறிவார்களாக.

ப. வீரப்பத் தஞ்சவராயன், கருவேலி

கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள்.

தொண்டமண்டலத்திற் சிறந்து விளங்காநின்ற காஞ்சீபுரத்தின்கண்ணே, ஆதிசைவர் குலத்திலே, கல்வியறிவொழுக்கங்களினுஞ்சிவபத்திசிவஞானங்களினுஞ்சிறப்புற்றோங்கியகாளத்தி

யப்பசிவாசாரியர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் காஞ்சி புரத்துள்ள குமரகோட்டத் தருச்சகருள் ஒருவர். அவர் நெடுங் காலம்புத்திரனில்லாமையாற் பெருங்கவலைகொண்டு புத்திரபாக்கி யத்தின் பொருட்டுக் குமரகோட்டத்தின்கண் எழுந்தருளிய பெருங்கருணைக் கடலாகிய சுப்பிரமணியக் கடவுளை விதிப்படி சிரத்தையோடும் உபாசித்துக்கொண்டு வந்தார். வரும்பொழுது, அக்கடவுளது திருவருளினாலே, தமிழ்நாட்டார்கள் சுப்பிரமணிய பத்தி பெற்றுய்யும்பொருட்டு, அச்சிவாசாரியருக்கு அவருடைய கற்பினிற்சிறந்த பத்தினியாரது அருமைத்திருவயிற்றில் ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ்செய்தார்.

அப்புத்திரருக்குக் கச்சியப்பர் என நாமகரணஞ்செய்யப் பட்டது. அவர்ஐந்தாம்வயதிலே வித்தியாரம்பஞ்செய்யப்பெற்று சம்ஸ்கிருதம் தமிழ் என்னும் இரண்டு பாஷைகளையும் கற்பாரா யினர். அன்பு அருள் வாய்மை பொறை அடக்கம் முதலிய நற் குணங்களெல்லாம் அவரோடுடன் வளர்ந்தன. அவர் ஏழாம் வயதிலே உபநயனஞ்செய்யப்பெற்று, வேதாத்தியனஞ் செய்வா ராயினர். சிலகாலத்துள்ளே சம்ஸ்கிருதத்தில் வேதவேதாங்கங் களையும் தமிழில் இலக்கணவிலக்கியங்களையுங்கற்று வல்லவரா யினர்.

அவர் சிலகாலமாயபின் சமயதீக்ஷைபெற்று, தமிழ்வேத மாகியதேவார திருவாசகங்களைஓதுவாராயினர் அதன்பின்விசேஷ தீக்ஷைபெற்றுச் சைவாகமங்களிற் கிரியா காண்டங்களைக் கற்ற றிந்து கொண்டார். அதன்பின் நிருவாணதீக்ஷையும் ஆசாரியா பிஷேகமும் பெற்று, சைவாகமத்தின் ஞானகாண்டங்களை ஓதி, அவற்றின் பொருளையும் தேவார திருவாசகங்களின் பொருளை யுங் கேட்டு, அப்பொருள் வேதத்தின் ஞானகாண்டங்களாகிய உபநிடதங்களின் பொருளோடு அபேதமாயிருக்கக்கண்டு, அத னைச்சிந்தித்துத் தெளிந்து கொண்டார்.

இவ்வியல்புடையராய் விளக்கமுற்ற கச்சியப்பசிவாசாரியர் குமரகோட்டத்துச்சுப்பிரமணியக்கடவுளை மெய்யன்போடு பூசை

செய்து கொண்டு வந்தார். ஒருநாட் சுப்பிரமணியக்கடவுள் கச்சியப்ப சிவாசாரியருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "அன்பனே, நீ காந்தபுராணத்தாறுசங்கிதைகளுட் சங்கரசங்கிதையின் முதற்கண்டமாகிய சிவரகசிய கண்டத்திலுள்ள நமது சரித்திரத்தைக் கந்தபுராணம் எனப் பெயரிட்டுத் தமிழிலே பெருங்காப்பியமாகப் பாடக்கடவாய்" என்று ஆஞ்ஞாபித்து, "திகட சக்கரச் செம்முக மைந்துளான்" என்று அடியெடுத்துக்கொடுத்து மறைந்தருளினர். உடனே கச்சியப்பசிவாசாரியர் விழித்தெழுந்து அழலிடைப்பட்ட மெழுகுபோல நெஞ்சநெக்குருக, உரோமஞ்சிலிர்ப்ப, உரைதடுமாற, கரையற்ற இன்பக்கடலின் அழுந்தி, "ஒன்றுக்கும் பற்றாத புழுத்த நாயினுங்கடையனாகிய தமியேனையும் ஒருபொருட்படுத்தி வந்தருளிச்செய்த எம்பெருமானாகிய சுப்பிரமணியக்கடவுளது பெருங்கருணைத்திறம் இருந்தபடி என்னே என்னே" என்று ஆனந்தக்கூத்தாடினர்.

மற்றைத் தினத்திலே கச்சியப்பசிவாசாரியர் நித்தியகருமமுடித்துக்கொண்டு, சுப்பிரமணியபூசை செய்தபின், புராணம் பாட ஆரம்பித்தருளினர். நாடோறும் நூறு செய்யுள் பாடி, அவை எழுதப்பட்ட ஏட்டையும், எழுத்தாணியையும் இராத்திரி காலப்பூசைமுற்றியபின் குமரகோட்டத்தடிகளுடைய திருவடிக் கீழ் வைத்துவிட்டுத் திருக்கதவுந் திருக்காப்பிட்டுக்கொண்டு தமதுதிருமாளிகைக்குப்போவார். பிற்றைநாட்காலையிலே நித்திய கருமம் முடித்துக்கொண்டு, பூசையின் பொருட்டுத் திருக்கோயிலினுள்ளே புகுந்து ஏட்டை எடுத்துப்பார்த்து, அதிற்சில விடங்களிலே திருத்தப்பட்டிருத்தல்கண்டு, அதனைச்சிரமேற்கொண்டு ஆனந்தபரவசராய்ச்சிறிதுபொழுது நின்று பின் பூசைசெய்வார்.

இவ்வாறே கச்சியப்பசிவாசாரியர் கந்தபுராணம்பாடி முடித்தபின், அதனைக் குமரகோட்டத்தில் அரங்கேற்றும் பொருட்டுச் சுபதினமுஞ்சுபமுகூர்த்தமும் நிச்சயித்துக்கொண்டு எங்குமுள்ள சிவனடியார்கள் எல்லாருக்கும் பத்திரம் விடுத்தருளினர். ஏவலாளர்கள் திருக்கோயிலையும் திருவீதிகளையும் மிக அலங்கரித்தார்கள். குறிக்கப்பட்ட சுபதினத்திலே, திருநெறித்

தமிழாகிய தேவார திருவாசகங்களில் வல்ல பெரியோர்களும், சிவாகமவிற்பன்னர்களும், வேதவேதாங்க பண்டிதர்களும், தமிழ்ப்புலவர்களும், இராசாக்களும், பிரபுக்களும், பிறருமாகிய எல்லாரும் வந்து கூடினார்கள்.

கச்சியப்பசிவாசாரியர் குமரகோட்டத்தடிகளைப் பூசை செய்து, அவர் சந்நிதானத்திலே மெழுகிப்பீடமிட்டு, அதின்மேற் பட்டைவிரித்து புஷ்பங்களைத்தூவித் தூபங்கொடுத்து ஆசனங்கற்பித்து, கந்தபுராணத் திருமுறையை அதன்மேல் வைத்து அருச்சித்து வணங்கித்துதித்தார். பின்பு இருந்து கொண்டு, "திகடசக்கரச் செம்முக மைந்துளான்" என்னும் முதற்செய்யுளை ஒருமுறைவாசித்து, "திகழ் தசக்கரச் செம் முகம் ஐந்து உளான்" என்றெடுத்து, "விளங்காநின்ற பத்துத் திருக்கைகளும் செவ்விய ஐந்து திருமுகங்களுமுள்ள சிவபெரு மானுடைய" என்று பொருளருளிச்செய்தார். உடனே அங்கி இருந்த தமிழ்ப்புலவர்களுள் ஒருவர் "சுவாமிகாள், திகழ்தசம் திகடசம் எனப் புணர்தற்கு விதி தொல்காப்பியமுதலிய இலக் கணநூல்களுள் ஒன்றிலாயினும் இல்லையே" என்றார். அதற்குக் கச்சியப்பசிவாசாரியர் "தாங்கள் கூறியதொக்கும், ஆயின் இம்முதலடி என்வாக்கன்று, சங்கப்புலவராகிய சுப்பிரமணியக் கடவுளது திருவாக்கு, அவரே எனக்கு இவ்வடி யெடுத்துத் தந் தருளினர்" என்றார். அதுகேட்ட அப்புலவர் புன்முறுவல் செய்து, "சுப்பிரமணியக்கடவுள் சுவாமிகளுக்கு இவ்வடி யெடுத்துத் தந்தருளியது சத்தியமாயின் ஆகுக. ஆயினும் அது இரகசியம். அதனை நாங்கள் அங்கீகரிப்பதெங்ஙனம்? அக்கடவுள் சுவாமிகளுக்குத் தோன்றியதுபோல எங்களுக்குந் தோன்றி இவ்வடி நாமே எடுத்துக் கொடுத்தருளினோம் என்று திருவாய் மலர்ந்தருளின் அங்கீகரிப்போம். அன்றேல், இதற்கு யாதானு மோரிலக்கணநூலில் விதிகாட்டின் அங்கீகரிப்போம். அல்லாக் கால், அரங்கேற்றவொட்டோம்" என்றார், கச்சியப்பசிவாசாரியர் "இவ்விரண்டினுள் ஒன்று நாளைச்செய்யப்படும்" என்றருளிச் செய்து சபையாரைப் போக்கிவிட்டு, அற்றைத்தினத்திலே இருவ

முதது செய்யாது, இராத்திரிகாலப்பூசை முற்றியபின் திருக்கத வந் திருக்காப்பிட்டுக் கொண்டு சந்நிதியிலே தரையிலே சயனித் தருளினர். அப்பொழுது சுப்பிரமணியக் கடவுள் கச்சியப்ப சிவாசாரியருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "அன்பனே சோழதேசத்தில் வீரசோழியம் என்று ஓரிலக்கணநூ லிருக் கின்றது. திகழ்தசம் திக்டசம் எனப் புணர்தற்கு அந்நூலிற் சந்திபடலத்திற் பதினெட்டாஞ்செய்யுளி லிருக்கின்றது. சோழ தேசத்துப் புலவனொருவன் அந்நூலை நாளைக்கு இவ்விடத்திற் கொண்டுவந்து அவ்விதியை எல்லாருக்குங் காட்டுவன்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினர்.

மற்றைநாட் சபையாரெல்லாருங் கூடியிருந்த பொழுது கச்சியப்ப சிவாசாரியர் தமக்கு முருகக்கடவுள் சொப்பனத்தில் அருளிச்செய்தமையை அவர்களுக்குச் சொல்லியருளினர். உட னே ஒரு புலவர் ஒருபுத்தகங் கையிற்கொண்டு அங்கேவந்தனர். அவரை அங்குள்ளோர்கள் நோக்கி, "நீர் யாவர்? உமது கையிற் புத்தகம் யாது?" என்று வினவினர்கள். அதற்கு அப்புலவர் "நாம் சோழதேசத்துள்ளேம், இப்புத்தகம் வீரசோழியம்" என்றார். அப்பொழுது முன்னைநாளில் ஆக்ஷே பித்த புலவர்விரைந்துசென்று, அப்புத்தகத்தை வாங்கிச் சந்திப் படலத்திற் பதினெட்டாஞ்செய்யுளை வாசித்துத் திகடசக்காம என்னும் புணர்ச்சிக்குவிதி அதிலிருத்தலை உணர்ந்து விம்மிதமும் மகிழ்ச்சியுமுற்றனர். மற்றைத் தமிழ்ப்புலவர்களும் ஒருவர்பின் ஒருவராக அதனை வாங்கிப்பார்த்து விம்மிதமும் மகிழ்சியுமுற்றார் கள். இறுதியிலே சோழதேசத்துப் புலவர் அப் புத்தகத்தைக் கச்சியப்ப சிவாசாரியர் கையிற்கொடுத்து, சபையா ரெல்லாரையும் நோக்கி, "ஆக்ஷேபம் ஒழிந்ததா" என்று சொல்லிவிட்டு மறைந் தருளினர். உடனே கச்சியப்பசிவாசாரியர் தம்மையாண்டருளிய ஆறுமுகக் கடவுளது பெருங்கருணைத் திறத்தை நினைந்து நினைந்து, சரீரம் விதிர்ப்புற, மயிர்க் காலெறும் திவலை உண்டாக என்பெல்லாம் நெக்கு நெக்குருக, மதகிடைப் புறப்படும் சலம் போல ஆனந்தபாஷ்பம் பொழியப் பரானந்த பரவசராய் எழுந்

திருளியிருந்தார். அப்பொழுது சபையார் எல்லாரும் "இங்ஙனம் எழுந்தருளிவந்த புலவர் குமாரக் கடவுளே" என்று துணிந்து ஆச்சரிய மடைந்து, வெயிலிடைப்பட்ட வெண்ணெய்போல மனங் கசிந்துருக உரோமஞ்சிலிர்ப்பக் குறுவேர்வை கொள்ள ஆனந்த வருவிசொரிய ஆனந்தக் கூத்தாடிக் கச்சியப்பசிவாசாரியருடைய பெருமையை நன்குணர்ந்து. அவர் திருவடிகளில் அடியற்ற மரம்போல் விழுந்து நமஸ்கரித்து, அவரைத் தோத்திரஞ் செய்தார்கள் ஆக்ஷேபஞ்செய்த புலவர் கச்சியப்ப சிவாசாரியரைப் பலதரமும் நமஸ்கரித்து, "எம்பெருமானே, புழுத்த நாயினுங் கடையேனாகிய தமியேன் சுவாமிகளுடைய மகிமையைச் சிறிதும் அறியாது ஆக்ஷேபித்த பெருங் குற்றத்தைப் பொறுத்து அடியேன்மீது திருவருள் சுரந்தருளுக" என்று அதிவிநயத்தோடு பிரார்த்தித்து, மீட்டும் அடியற்ற மரம்போல் வீழ்ந்துகிடந்தார். கச்சியப்ப சிவாசாரியர் எழுந்து, அப் புலவருடைய இரண்டு கைகளையும் தம்முடைய அருமைத் திருக்கைகளினாலே பற்றி யெடுத்து இறுகத்தழுவி, "ஐயரே, தங்கள் ஆக்ஷேபத்தினாலன்றோ இச்சபையாரெல்லாருக்கும் திருவருளினுண்மை வெளிப்பட்டது. இதன் பொருட்டுத் தங்களுக்குச் செயற்பாலதாகிய கைம்மாறு யாது, அறியேம் அறியேம்" என்று பாராட்டியருளினார்.

அதன்பின்சபையாரெல்லாரும் நமஸ்கரித்து, "சுவாமிகாள் இனிப் புராணத்தைத் தடையின்றி அரங்கேற்ற ஆரம்பித்தருளுக" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அங்ஙனமே கச்சியப்ப சிவாசாரியர் அரங்கேற்றுவாராயினார். காஞ்சித் திருநகரத்திலுள்ள ஆதிசைவர்கள் முதலானவர்களுக்கும் கந்தபுராணங் கேட்கவந்த எண்ணிறந்த அடியார்களுக்கும் போசன முதலியவைகளெல்லாம் தொண்டை நாட்டுள்ள இருபத்துநான்கு கோட்டத்து வேளாளப் பிரபுக்களுடைய செலவினாலே நடந்தன. எல்லாரும் நியமமாக வந்து பேராசையொடு கேட்கக் கச்சியப்ப சிவாசாரியர் தினந்தோறும் புராணம் வாசித்துப் பொருள் சொல்லி ஒரு வருஷத்திலே முடித்தருளினார்.

புராண முற்றுப் பெற்றவுடனே கச்சியப்ப சிவாசாரியர் புராணத் திருமுறையை விதிப்படி அருச்சனை செய்து நமஸ்கரித் தார். அப்பொழுது அங்குள்ள எத்திறத்தார்களும் அன்பினோடு விம்மிவிம்மி தண்டாகாரமாக விழுந்து கச்சியப்ப சிவாசாரியரை நமஸ்கரித் தெழுந்து, இரண்டு கைகளுஞ் சிரசின்மேலேறிக் குவியநின்று, துதித்தார்கள். கச்சியப்ப சிவாசாரியர் கந்த புராண திருமுறையோடுந் தந்தச்சிவிகையில் எழுந்தருளி, இருபத்து நான்கு கோட்டத்துமுள்ள வேளாண்மையுள்ள வேளாளப் பிரபுக்க ளுள்ளே சிலர் சிவிகைதாங்க, சிலர், வெண்சாமரம் வீச, சிலர், குடை கொடி பிடிக்க, நானாவித மங்கலவாத்திய வொலியினாலே திக்குகளெல்லாஞ் செவிடுபட, பிராமணர்கள் வேதகோஷஞ் செய்ய, சிவனடியார்கள் சரவணபவ! சரவணபவ!! என்று சொல்லும் பேரொலி தழைக்க திருநகர வாசிகள் திருவீதிக டோறுஞ் சுத்திசெய்து வாழைகள்நாட்டித்தோரணங்கள் நிரைத் துப் பூமாலைகள் தூக்கிப் பூரணகும்பங்கள் வைத்துப் பொரி தூவித் திருவிளக்கேற்றி அறுகெடுக்க தமது அருமைத் திரு மேனியிலே தரிக்கப்பட்ட திருபுண்டரத்தின் அழகையும், உருத்திராக்ஷ மாலைகளின் அழகையும், சின்முத்திரையையும், திருக்கண்களினின்று பொழியும் பரமானந்த வாரியையும் அடி யார்கள் கண்டு மனநெக்த நெக்குருக வணங்கித் துதித்து, ஆனந்தக்கூத்தாட திருவீதி வலஞ்செய்து, குமரகோட்டச் சந் நிதியை அடைந்து, சிவிகையினின்றும், இறங்கித் திருமுறை யைத் திருக்கோயிலினுள்ளே கொண்டு போய்த் திருமுன்னே வைத்தருளினர். உடனே எல்லாரும் கச்சியப்பசிவாசாரியரை, அவர் "அமையும் அமையும்" என்ற வழியும் தவராது, ஆரா மையினாலே பலகாலும் நமஸ்கரித்து "பரமகருணாநிதியாகிய எம்பெருமான் தமிழ்நாட்டா ரெல்லாரும் பிழைக்கும் பொருட் டுத் திருவாய்மலர்ந்தருளிய இப்புராணமாகிய திவ்வியாமிர்தத் தை அடியேங்கள் எஞ்செவி வாய்மடுத்து உய்ந்தனம் உய்ந்த னம்" என்று விண்ணப்பஞ் செய்து இன்பமுற்றார்கள்.

தமிழ் நாடெங்குமுள்ள சிவனடியார்க ளெல்லாரும், இக்

கந்தபுராணத்தை மிகப்பாராட்டி, சிரத்தையோடெழுதுவோரும் வாசிப்போரும், பொருள் சொல்வோரும், கேட்போருமாய், இதன் சொற்சுவை பொருட்சுவைகளை அனுபவித்துப் பேரானந்தப் பெருஞ்செல்வம் அடைந்தார்கள்.

பெருங்கருணைப் பிழம்பாகிய கச்சியப்ப சிவாசாரியர் பின்னருஞ் சில காலம் குமரகோட்டத் தடிகளைப் பூசைபண்ணிக் கொண்டும் ஞானநிட்டை செய்துகொண்டும் இருந்து, அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நின்ற சிவத்தோடும் இரண்டறக் கலந்தனர்.

## சாதுசங்க விசாரணை.

(57-ம் பக்கத் தொடர்ச்சி.)

கன்னட தேயத்தில் இங்குளாபுரியில், இலிங்கதாரணஞ் செய்யும் வீரசைவராகிய மாதரசன் என்னும் பிராமணோத்தமருக்கும் அவர் மனைவி மாதாம்பிகைக்கும் நந்தீச்சுரரின் அம்சமாகிய வசவேசர் அவதரித்தனர்.

அவர் கல்யாணபுரத்தை இராசதானியாகக்கொண்டவனும் சமண சமயத்தை மேற்கொண்டவனுமாகிய விச்சலன் என்னும் அரசனுக்கு மந்திரியாக இருந்தனர். அக்காலத்தில் அல்லமதேவரைக்காணும் பொருட்டுப் பலதிசைகளிலும் இருந்து வரும் அடியார்களுக்கு வேண்டியவைகளை, முதலேழு வள்ளல்களைப் போல் குறிப்பறிந்து கொடுத்துவந்ததுமன்றி அறுசுவை பதார்த் தங்களுடன் அடியர்குழாங்களுக்குத் திருவமுது செய்வித்தும் வந்தனர்.

### பிரபுலிங்கலீலை.

மொழியினுன் னினைவால் நோக்கால்
முக்கணு னடியர் வேண்டிற்
றொழிவிலா துதவித் தாய்போல்
ஓம்பினன் புறமதத்தோர்
வழியெலாம் வழக்குமாற
மலிபுகழ்ச் சைவமென்னும்
பழியிலா வழிநடப்பப்
பண்ணினன் வசவதேவன்.

அக்காலத்தில் அவரது திருமடாலயத்தில் அடியார்களுக்கு அமுதளிக்கும்போது தமது வீரசைவ ஆசாரப்படி சரீரத்தில் சிவலிங்கதாரணம் செய்துகொண்டிருக்கும் அடியார்களுடனே தானும் புசிப்பார். அங்ஙனமிருக்க, ஒருநாள் இரண்டு மூன்று கள்ளர்கள் காஷாயம் அணிந்து இலிங்க தாரிகள்போல் வேடம் தரித்து போசன வேளையில், சாப்பிடுவதற்காக அம்மடத்தில் நுழைந்து மற்ற அடியார்களோடு பந்தியில் உட்கார்ந்து கொண்டார்கள். அவர்கள், கண்டோர் தாங்களும் இலிங்கதாரணம் செய்து கொண்டிருப்பதாகக் கருதவேண்டியதற்காக, வழுதுளங்காயின் (கத்தரிக்காய்) காம்பை நீக்கிவிட்டு அதைச் சீலைத்துண்டில் சுருட்டிப் புயங்களில் கட்டிக்கொண்டிருந்தார்கள்.

போசனம் அளிக்கும் வேளைவந்ததும் யாவர்க்கும் அறுசுவை யுண்டிபரிமாறப்பட்டது. அச்சமயம் அங்கு நடக்கப் போகும் கிரியைகளைப்பற்றி இக்கள்ளர் சற்றும் அறியார்கள். போசனம் பரிமாறப் பட்டதும் சாப்பிட்டுவிட்டுத் தட்சணை பெற்றுக்கொண்டு சுகமே செல்லலா மென்று நம்பியிருந்தார்கள் ஆனால் போசனம் வட்டிக்கப்பட்ட பின்பும், ஒருவரும் புசிக்க ஆரம்பிக்காமலும், இலையைக்கூட தொடாமலுமே இருப்பதைக் கண்டு, 'ஓகோ ஏதோ ஒருசமிக்கை செய்வார்கள் போல் இருக்கிறது. அப்புறமே யாவரும் புசிக்கத் தொடங்குவார்கள் போலும்' என்று கருதினார்கள். மறுநிமிடம் மடாதிபதியாகிய பெரியோர் கரத்தில் தீபாராதனைத் தட்டை யேந்திக்கொண்டு அங்கு வந்தவுடனே, அடியார் அனைவரும் தம் தம் அங்கத்தினுள்ள இலிங்கங்களை வெளியிலெடுத்து அங்கையில் ஏந்திக் கொண்டார்கள். ஏனெனில் அப்பெரியோர் ஒவ்வொரு இலிங்க மூர்த்திக்கும் தீபாராதனை காட்டி நைவேதனம் செய்வித்த பின்பே யாவரும் புசிக்கத் தொடங்கவேண்டும். இப்பொழுது வழுதுளங்காய் கட்டிக்கொண்டு வந்தகள்ளர் என் செய்வார்கள்? அவர்களுக்கு பெருந்திகில் பிடித்துவிட்டது. அந்த மகான் வரிசையாய் தீபாராதனை காட்டிக்கொண்டே வந்து இக்கள்ளரி

டம் நெருங்கியபோது, இவர்கள் கையில் இலிங்கம் ஏந்தியிராமல் வாய்பேசவும் முடியாமல் மிக்க மிரட்சியோடு விழிப்பதைக் கண்டார்.

இக்கள்ளரின் தீச்செயலை யுணர்ந்து, அம்மடாதிபதி பரமசிவத்தின் திருவருளை நினைந்து, 'எமது பெருமானே! வயிற்றின் கொடுமைக்காக அன்னத்திற்காசைப்பட்டு வழுதுளங்காயை இலிங்கமெனக் கட்டிக்கொண்டு அடியார்கள் போல பொய்வேடம் தரித்து வந்த இக்கள்ளர்கள், தங்களிடத்து மெய்ப் பக்தியுடைய உண்மைச் சிவனடியார்களாகிவிடவும், இவர்கள் கட்டிக்கொண்டு வந்திருக்கும் வழுதுளங்காய்கள் மெய்யான சிவலிங்கங்களாக மாறிவிடவும் திருவருள்புரியவேண்டும் என்று பிரார்த்தித்தனர்.

## பிரபுலிங்க லீலை.

வெள்ளவேணிப்பெருந்தகைக்கியாஞ்செய்யடிமைமெய்யாகக்
கள்ளவேடம்புனைந்திருந்தகள்வரெல்லாங்களங்கமறும்
உள்ளமோடுமெய்யடியாராகவுள்ளத்துள்ளுமருள்
வள்ளலாகும்வசவேசன்மலர்த்தாள்தலையால்வணங்குவாம்.

இவ்வாறு அம்மகான் பிரார்த்திக்க, அக்கள்ளர்கள் மெய்யடியார்க மாறி அருள்பெற்று உய்ந்தார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது.

'அரச சமுகத்தையும் அடுப்பங்கறையையும் காத்தவன் வீண்போகான்' 'பருமரத்தை அண்டினபல்லியும் சாகாது' என்னும் முதுமொழிகள் போல் நல்லோர்களை அடுத்திருப்பவர்களுக்கு ஒருநாளும் குறைவில்லை. அவர்கள் உன்னதபதவிக்கே போவார்கள்.

சீகாழியில் அவதரித்த திருஞானசம்பந்த மூர்த்திநாயனாரை அவரது பிதாவாகிய சிவபாத விருதயரும் ஏனைய சுற்றத்தார்களும் விவாகம் செய்தருள வேண்டுமென்று கேட்க, அதற்குப் பிள்ளையார் 'கூடவே கூடாது' என்று மறுத்தருளப் பின்னும் கைதொழுது வற்புறுத்தினதின் பேரில் ஒருவாறு

மனமிசைந்து திருநெல்லூரில் வசிக்கும் நம்பாண்டார் நம்பி என்னும் பிராமணோத்தமர் புதல்வியை விவாகம் செய்துக் கொள்ள நிச்சயித்து, விவாகம் நடைபெறும்போது அக்கினியை வலஞ்செய்ய வேண்டியதாதலால் 'அக்கினிபாவார் பரமசிவனே' எனத்திருவுளங்கொண்டு திருப்பெருமணம் என்னும் சிவாலயத்திற் செல்லக்கருதி வேதவிதிப்படி வளர்த்த அக்கினியை வலஞ்செய்து, 'இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே நான் இவளோடு கடவுளது திருவடியை அடைவேன்' எனக் கருதி அனைவரும் சூழ்ந்துவர மனைவியாரோடு சென்று ஆலயத்திற் பிரவேசித்துத் தமது திருமணத்தைத் தரிசித்தவர்களுடைய பாசத்தை நீக்க நினைந்து, "திருநல்லூர் பெருமணத்தில் எழுந்தருளி யிருக்கும் கடவுளே! தேவரீருடைய திருவடிகளை அடையும் பதம் இதுவே" என்று "கல்லூர்ப் பெருமணம்' என்னும் திருப்பதிகத்தைப் பாடினார்

அப்போது கோயிலுட்பட மேலோங்கிய ஒரு சோதி கிளம்பி, அதில் ஒரு வாசல் தோன்றிற்று. அப்போது சுந்தரமூர்த்தி நாயனார் 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' என்னும் பதிகத்தைத் திருவாய்மலர்ந்தருளி, 'இக்கலியாணங் காண வந்த எல்லீரும் உங்கள் சனனநோய் தீரும் பொருட்டு இச்சோதியினுள்ளே பிரவேசியுங்கள்' எனப்புகன்றார். அங்ஙனமே பிள்ளையாருடைய சிவிகை தாங்கிய பரிசனங்கள் முதலிய சமஸ்தரும் அந்தச்சோதியிற் கலந்து சோதி சொரூபமானார்கள். அதன் பின் ஞானசம்பந்த மூர்த்தியானவர் தன்மனைவியாரைக் கைப்பற்றிக்கொண்டு அந்தச்சோதியில் மறைந்தருளினார்என்பது புராணக்கருத்து.

ஔவையார்.

இனியது கேட்கிற் றனிநெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்
அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்
அதனினும் இனிது அறிவுள்ளோரைக்
கனவினும் நனவினுங் காண்பது தானே.

### திருவருட்பா அகவல்.

மோனந்தான் கொண்டு முடிந்தவிடத் தோங்குபர
மானந்தா தீதத் தமர்ந்தோருந்—தானந்தாச்
சாதுக்களாமவர்தஞ் சங்கமகத்துவத்தைச்
சாதுக்களன் றியெவர் தாமறிவார்—நீதுக்க
நீங்கியன்னோர் சங்கத்தினின்று மகிழ்ந்தேத்திநித
மாங்கவர் தாட்குற்றேவலாய்ந் தியற்றி

சற்சபைக்குரியார்தம்மொடுங்கூடித்தனித்தபேரன்புமெய்யறிவும்
நற்சபைக்குரியவொழுக்கமுமழியாநல்லமெய்வாழ்க்கையும்பெற்றே
சிற்சபைநடமும்பொற்சபைநடமுந்தினந்தொறும்பாடிநின்றுடித்
தெற்சபையுலகத்துயிர்க்கெலாமின்பஞ்செய்வதென்னிச்சையாமெந்தாய்

## வைத்தியம்.

### சேர்க்கைப் பதார்த்தங்களின் விபரம்.

திரிகடுகு—சுக்கு, மிளகு, திப்பிலி.

திரிபலை—கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி.

சதுர்ச்சாதம்—ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, கிராம்பு, ஏலம்.

பஞ்சசாதம்—சதுர்ச்சாதத்துடன் வால்மிளகைச் சேர்க்க.

சாட்சாதம்-பஞ்சசாதத்துடன் கருவாப்பட்டையைச்சேர்க்கவும்.

திரிகாயம்—வெள்ளுள்ளி, கடுகு, பெருங்காயம்.

திரிகடகம்—இந்துப்பு, திப்பிலி, பீதரோகணி.

திரிகோபம்—சந்தனம், சிவதை, வெண்குங்கிலியம்.

திரிபத்திரி—லவங்கப்பத்திரி, ஜாதிப்பத்திரி, தாளிசபத்திரி.

பஞ்சகவியம்—ஆவின்பால், தயிர், வெண்ணெய், நீர், சாணம்.

பஞ்சதிரவியம்—லவங்கப்பட்டை, லவங்கபத்திரி,

இலாமிச்சவேர், சண்பகப்பூ, நெல்விமுள்ளி.

பஞ்சரசம்—இரசம், லிங்கம், வீரம், இரசசெந்தூரம், பூரம்.

அஞ்செண்ணெய்—எள், வேம்பு, இலுப்பை, ஆமணக்கு, புங்கு இவைகளின் எண்ணெய்.

பஞ்சமூலம்—பெருமருந்து, சிறுகுருஞ்சா, பேராத்தை, சிறுதேக்கு, சுக்கு.

ஐங்காயம்—வெள்ளுள்ளி, வெந்தயம், கடுகு, ஓமம், காயம்.

பஞ்சலவணம்—இந்துப்பு, வளையலுப்பு, பாறையுப்பு, வெடியுப்பு, சவட்டுப்பு.

பஞ்சபாசாணம்—அரிதாரம், வெள்ளை, கெவுரி, லிங்கம், தொட்டிப்பாஷாணம்.

பஞ்சாக்கினிமூலம்—காட்டுக்கரணை, கரிக்கரணை, புளியமடல், பிரண்டை, கோப்பிரண்டை.

அஷ்டசந்தனம்—அகில்மலாக்காசந்தனம், கோஷ்டம், இலவங்கப்பட்டை, கஸ்தூரிமஞ்சள், இலவங்கம், குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம்.

அஷ்டகாயம்—மிளகு, திப்பிலி, சுக்கு, ஓமம், காயம், கரியசீரகம் நற்சீரகம், பெருஞ்சீரகம்.

நவலோகம்—தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு, நாகம், பித்தளை, தரா, வெங்கலம், காரீயம்.

பஞ்சலோகம்—தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம்.

## நவலோக நவபாசாண மாரணிகள்.

செங்கற்றாளை, சிவந்தசதுரக்கள்ளி, கல்லலரி, இவைகட்குதங்கம், செம்பாம்.

குப்பைமுள்ளி, அம்மன்பச்சரிசி, குங்கிலியக்கட்டை, நத்தச்சூரி, பனிதாங்கி, உப்பிலாங்கொடி, அவரைப்பூ இவைகட்குத்தங்கம் நீறும், அதிற்பணவிடைவீதம் அனுபானங்களிற் கொடுக்க கபரோகம் 96, குன்மம், மகோதரம் வாயு, நீராம்பல் சூலை சிரநோய் கண்நோய் குஷ்டம் குறைநோய், பிரமேகம், நீரிழிவு முதலிய நோய்கள்திரும்.

செம்முள்ளி, செண்பகப்பூ, முளைக்கீரைத்தண்டு, சிவந்தம்மன்பச்சரிசி, வெண்டிமுளை இவைகளுக்கு வெள்ளிபற்பமாகும், பணவிடைவீதம் அனுபானத்திலிட குன்மம், வாயு, நீர்ச்சிறுப்பு நீர்க்கட்டு, சதையடைப்பு, கிருச்சரம், கிருகிருப்பு பெருமூச்சு ஏங்கல், மூக்கு நீர்பாய்ச்சல், பீனிசம், மண்டைச்சூலைப்புண் தீரும்.

புளியமடல், புளியஞ்சிறுகீரை எழுத்தாணிப்பூடு, கற்றாளை வேர், பூவரசவேர், கொடிக்கள்ளி, எலுமிச்சம்பழம், புளியிலை

இவைகளின் சாற்றில் தாம்பிரத்தை உருக்கிச்சாய்த்து அதைப் பொடித்து சிவந்த புளியமடற்கிழங்கு அதனிலை, ஆடாதோடை‘ அந்தரத்தாமரை, சிறுசெருப்படை, பொற்றலைக்கரிப்பான், கற்ருளைவேர், மிளகுதக்காளி, எருக்கிலைப்பழுப்பு இவைகளின் சா_ றலரைத்துப் புடம்போடச் செந்தூரமாகும். அனுபானத்திலிட குன்மவியாதிகள்தீரும்.

ஆத்தலரி, புளியஞ்சிறுகீரை, வெண்தாமரைக்கிழங்கு, கருப்புக் கிலுகிலுப்பை, கொடிக்கள்ளிவேர், நேர்வாளம், வெண்ணொச்சி, எருக்கம்பால், வெண்ணாகம், கொடிவேலிவேர், வீரம். இவைகளை யரைத்துத் தாம்பிரத் தகட்டுக்குப் பூசி புடம்போட நீறும். பணவிடைவீதம் அனுபானத்திலிட குன்மவாயு, சூலைவாயு, குஷ்டம்நீங்கும். தாதுபுஷ்டியுண்டாம். நரம்புகளிருகும்.

மணத்தக்காளி யிலைச்சாற்றில் வெள்ளீயத்தை உருக்கிச் சாய்க்க கட்டும். அப்பாலதைக் கள்ளு, காடி, புளித்தமோர், நல்லெண்ணெய், முள்ளித்தண்டு கோசலம் இவைகளில் வெண்ணாகம் கருநாகம் சுத்தியாகும். பூவரசம்பட்டை, நான்முகப்புல், பற்படகம், நுணாவேர், பசளி, நாவிக்கிழங்கு, வெண்ணொச்சி, கஞ்சா, ஆடுதீண்டாப்பாளைவேர், கடல்நுரை, ஆட்டுச்செவியிலை. இவைகளை யரைத்து வெள்ளீயத்திற்குப் பூசிப்புடம்போடநீறும். பணவிடை வீதம் அனுபானத்திலிட நீரடைப்பு, 'கல்லடைப்பு, சதையடைப்பு, கிருச்சரம், மேகம் நீங்கும்.

விஷ்வேர் கூத்தன்குதம்பை, நிலத்துத்தி, சத்திசாரணைக் கிழங்கு, நான்முகப்புல், பொடுதலை, முதியார்கூந்தல், பெருஞ்செருப்படை, நொச்சி, நுணாவேர், பற்படகம், கஞ்சா, இவைகளை யரைத்துக், கருவங்கத்துக்குப்பூசி புடமிடநீறும். பணவிடை வீதம் அனுபானத்திலிட சூலை, குஷ்டம், கிரந்தி, மேகம், காந்தல், நீர்க்கடுப்பு நீங்கும்.

சிறுகீரைவேர், கற்ருளைவேர், சிறுசெருப்படை, பொற்றலைக்கரிப்பான், மிளகுதக்காளி, சென்னியுருவிவேர், வெடியுப்பு சீனம் பவளக்கால், மனோசிலை, இவைகளாற் கருவங்கம் செந்தூர

மாகும். பணவிடைவீதம் அனுபானத்திலிட ஷெ வியாதிகள் தீரும்.

பசளியிலைக்கு வெண்சலம்நீரும்; அனுபானத்திலிட சூலை, குன்மவாயு, க்ஷயம், இருமல், உள்மாந்தை நீங்கும்.

வெண்காலி, நிலக்கடம்பு, நாகதாளி, ஆடுதீண்டாப்பாளை, புனமுருங்கை, மயூரச்சிகை இவைகளின் சாற்றிலும், இலுப்பை எண்ணெய், நல்லெண்ணெய் இவற்றிலும் நாகத்தை உருக்கிச் சாய்க்க அது கட்டிச்சுத்தியாம். கீழ்காய்நெல்லி, ஆமணக்கிலை, வேலிப்பருத்தியிலை, இலுப்பையிலை, சிறுகீரைவேர், பெருங் காயம், அபின், ஊமத்தம்பூ, நந்தியாவட்டப்பூ, சிறுஅம்மன் பச்சரிசி, எலிமுள்ளியிலை, இவைகளுக்கு நாகம்நீறும். பணவிடை அனுபானங்களிலிட மூலைவாயுகிராணி, வயிறெரிவு, நெஞ்செறிவு, வாய்நீரோடல் தீரும்.

வேலிப்பருத்தியிலைச்சாற்றிலும், பனங்குருத்துமட்டைச் சாற்றிலும் நாகரசத்தையரைத்துப் புடம்போட நீறும். மிளகை நல்லெண்ணெய்யால் மெழுகுபோலாட்டி அதிற்பணவிடைவீதம் வைத்துச்சாப்பிட மேகவெட்டை தீரும். வாதாம்பருப்பு, முருங் கைப்பூ, பேரீத்தம்பழம் இவைகளிற்கொள்ள நாதங்கட்டும்.

தும்பைஇலைக்குத்திராநீறும் அனுபானத்திலிடநீர்ச்சிறுப்பு வண்டுகடி, சில்விஷம், குன்மம், க்ஷயம், குஷ்டம், குன்ம சூலை பதினெட்டும் நீங்கும்.

காஞ்சிரைவேருக்குப் பித்தளைநீறும், பணவிடைவீதம் அனுபானத்திலிட குன்மம், வாயு, கிராணி, மூலப்பாண்டு, நீர்க்கட்டு, நீர்க்கனப்பு, வாய்நீரூறல், குடல்வாயு, பாரிசவாயு, ஆனந்தவாயு, கெண்டைகவுசி நீங்கும்.

கல்த்தூரிக்கு ஒளுகரைநீரும். அனுபானத்திலிட பாண்டு வகை, வீக்கம், மகோதரம், நீராம்பல் தீரும்.

எருக்கவேருக்கும் கோங்கிலவு, கல்நார் நீறும் அனுபானத் திலிட கபரோகம் (96) உஷ்ணமும் நீங்கும்.

சுயம்பிரகாசத்துணை.

ஸம்ஷுல் மஹறிபா என்னும்

# ஞானசூரியன்.

இது ஒரு இனிய நிகரில்லாத மாதப் பத்திரிகை.

தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (தமிழ் வேதம்)

(All Rights Reserved.)

மலர் 2.] ருத்ரோற்காரி௵ தை௴ 1௳ 1924௵ ஜனவரி௴ 14௳ [இதழ் 10.

## கடவுள் வணக்கம்.

தேனெனத் தமிழ்சொல் கருணையானந்த
    தேசிக வுட்சிதா காய
ஞானசூ ரியன்வந் துதித்தொளி விரிப்ப
    நானிலத் துதித்தமா ணிடர்கள்
நானெனு மகந்தைக் காரிருட் படலம்
    நலிந்தவ ருளமலர் விரியச்
சோனைபோ லருள்செய் சுயம்பிர காசச்
    சோதியைப் போதெலாந் தொழுவாம்.

(பத்திரிகாசிரியர்.)

உரையால் நினைவால் அருள்நோக்கால் உலக ருணர்வைப் பிணித்தமல
இருளா னதனை அறமாற்ற எழுந்த ஞான சூரியனே. (பிரபுலிங்கலீலை)

வாழ்வனைத்து மயக்கமெனத் தேர்ந்தேன் றேர்ந்த
    வாறேநா னப்பாலோர் வழிபா ராமற்
றாழ்வுபெற்றிங் கிருந்தேனீ தென்ன மாயந்
    தடையுற்றான் மேற்கதியுந் தடைய தாமே
யூழ்வலியோ வல்லதுன்றன் றிருக்கூத் தோவிங்
    கொருதமியேன் மேற்குறையோ வுணர்த்தா யின்னம்
பாழவதிப் படவெனக்கு முடியா தெல்லாம்
    படைத்தளித்துத் துடைக்கவல்ல பரிசி னானே.

(தாயுமான வள்ளல்.)

# ஞானசூரியன்

## இது ஒரு நிகரில்லாத மாத சஞ்சிகை.

### அடியார் நிந்தை.

(174-ம் பக்கத் தொடர்ச்சி.)

#### பெரிய புராணம்.

*நின்றவூர் பூசலன்பனெடிது நாணினைந் துசெய்த*
*நன்றுநீடாலயத்து நாளைநாம்புகுவோம் நீயிங்*
*கொன்றியசெயலை நாளையொழிந்து பின்கொள்வாயென்று*
*கொன்றைவார் சடையார் தொண்டர் கோயில்கொண்டருளப் போந்தார்.*

அரசன் விழித்தெழுந்து நின்றவூரில் வந்து பூசலாரை விசாரித்து வந்து கண்டு, 'சுவாமி! தேவரீர் கட்டிய கோவில் எங்குளது? அதற்குஇன்று பிரதிட்டைசெய்யும் சுபதினமென்று சிவபெருமான் நேற்று கனவில்வந்து சொல்ல அறிந்து வணங்குதற்கு வந்தேன்' என விண்ணப்பித்து நின்றார். அதற்குப் பூசலார் மானதமாகக் கோவில்கட்டியதுமுதல் ஆதியோடந்தமாகச் சொல்லி மானதமாகக் கும்பாபிஷேகமும் குறித்ததினத்தில் செய்து பரகதியடைந்தார் என்பது பெரியபுராணக் கருத்து.

ஆதலால் வெளிப்பார்வைக்கு இடம்பமாகக் கோவில்கட்டி அங்கவஸ்திரத்தையும், தாம்புக்கயிற்றையும் சுருட்டிவைத்தும், சுடுசோறுபோல் ஆவிவரும்படியாகச் செங்கல்லைப் பழுக்கக் காய்ச்சி ஓர் பாத்திரத்தில்வைத்து ஈரவஸ்திரத்தால் மூடிக் கொணர்ந்தும், பூசை செய்வதுபோல் காயத்தில் மாத்திரம் பாவனை காட்டி பிறர் தம்மை பத்திமான் என்றெண்ணி விசுவாசிக்கவும் தாம் அவர்களிடத்தில் பகற்கொள்ளை யடிக்கவும்

நினைந்து, அந்த சொரூபங்களுக்குமுன், 'சத்தம் மட்டும் உனக்கு தண்ணீர் முதலியவை எனக்கு' என்று தேங்காய் உடைத்து, சாம்பிராணிப் புகை உனக்கு சாதமுலியவை யெனக்கு' என்று வெறுமணியை யாட்டி பரிகாசஞ் செய்யும் புண்ணியசீலர்கள், ஆலமாகப் பூசைசெய்ய முடியாவிட்டால் மேற்கூறிய வீமன் பூசலார் முதலானவர்களைப்போல் மானதமாகப் பூசைசெய்வ தற்கு அவர்கள் சரித்திரங்களைக் கேட்டறியார் போலும். இத்தன்மையுடையவர்கள் கோவிலுக்குத் தாசி வாராவிட்டால் சுவாமிக்குத் திருப்தியில்லையென்று வஞ்சகமாய்ச்சொல்லி ஜனங் களை ஏற்கனவே ஏமாற்றி அதற்கேற்ற சாஸ்திரங்களை யெழுதி வைத்து வரி வசூலித்துவருவது போதாதென்று இப்போதும் தம் இஷ்ட காமியங்களை நிறைவேற்றுதற்காகப் பஞ்சாயத்தார் களுக்கு மாத்திரம் நல்லபிள்ளையாக நடந்து அவர்களையும் விவேக சாகரம் என்னும் சிற்றின்பக்கதைகளில் பெண்கள் தத்தம் புருடரை ஏமாற்றியதுபோல் ஏமாற்றி, தம் புத்திக்குத் தகுந்த உருத்திர கணிகையர்களை வரவழைத்துக் கோவிலென்றுங் கொஞ்சமும் நெஞ்சு அஞ்சாமல், சொல்லத்தகாத அக்கிரமங்களை புரிந்துகொண்டு இருக்கிறார்கள்.

இத்தன்மையானவர்கள் சர்வ சீவ தயாபராராகிய கடவுளை பரிகாசம் பண்ணுபவர்களேயன்றி வாஸ்தவத்தில் பத்திமானவார் களா? இவர்கள் அழுகள்ளன் தொழுகள்ளன் ஆசாரக்கள்ளன் என்கிற மூவகைக் கள்வர்குழாத்தைச்சேர்ந்த பகற்கொள்ளை பக்காத்திருடர்கள் என்பதற்கு ஆட்சேபனையும் உண்டா?

மதங்கொண்ட யானையானது தன் மத்தகத்தில் தானே மண்ணைவாறிப் போட்டுக்கொள்ளுவதுபோல், பீமதங்கொண்ட உருத்திராக்கப் பூனைகள் பத்திசெய்வதாகப் பாவத்தைச்சேக ரித்து வைக்கிறார்களே சகல சீவகோடிகளுக்கும் அமுதளித்து ஊட்டி உறக்காட்டி இரட்சித்து, பிறப் பிறப்பு பசி தாகம் முதலியவைகளின்றி யெப்போதும் ஒரே படித்தாக இருக்கும் கடவுளுக்கு பசி தாகம் வந்துவிட்டதாக எண்ணி நிவர்த்திப்

பவர்கள் இவர்கள்தானு? இந்த இரகசியார்த்தத்தை யெந்தக் குருவினிடத்தில் கேட்டறிந்தார்களோ தெரியவில்லை.

இதுகாரணம் பற்றியே கண்ணுடைய வள்ளல், உயிர்களுக் கெல்லாம் உயிராயிருந்து ஊட்டியுபசரிக்கும் தாயனைய கருணை நிதியாகிய மூவாமுதல்வனுக்குப் பசிவந்து விட்டதாகச் சோடச வுபசார முதலானவைகள் செய்து உபசரிப்பது எப்படியிருக்கிற தெனில், எல்லோரும் புசித்த புசிப்புக்களை அவரவர் வயிற்றுள் ளிருந்து சீரணிக்கப்பண்ணுகிற அக்கினிதேவனுக்கு அசீரணம் (செமியாமை) பிறந்துவிட்டதாக எண்ணி சுக்கரைத்துக் கொடுத்து சீதளம் பிறந்து விட்டதென்று வைக்கோலால் மூடி முன்னரே நாம் இவ்வாறு செய்யாமற் போனோமே யென்று வருந்துபவர் யாரைப்போல் இருக்கிறாரென்றால் தண்ணீரைத் தண்ணீரால்கழுவித் தமதுநிழலை மண்ணுக்குள் புதைத்து அந்த நிழலைத் தம்முடைய கால்அடியினால் இத்தனை அடியென்று அளந்து அளவெடுப்பவரைப்போல் இருக்கிறதென்னும் பொரு ளடக்கி,

அக்கினிதேவற் கசீர்த்தியென்று சுக்கரைத்து
வைக்கோலால் மூடி மலையடுப்பிற்—றுக்கியாய்
நீரைக்கழுவி நிழலைப் புதைத்தளப்பார்
ஆரைப் போல்வா ரென்னலாம். எனவும்,

வைராக்கிய சதகம்.

நாமரற் கருச்சனைமுதலிய கொடுநலஞ்செய்தே மவையின்றித்
தீமைசெய்துளே மெனவுமுன்னிலை யொருசிறிதசை வடைந்தாலும்
யாமியற்ற பராதமென்னினை வுமற்றசைகிலையெனில் நெஞ்சே
எமமிக்குறச் செய்யும்நன்கிறை கழற்கெனத் துணிந்திடுநீயே.

எனவும் திருவாய்மலர்ந்திருக்கின்றனர். ஆகையால்,

சங்கரனொடு சரந்தம்மில் வேறெனும்
அங்கவனறிவரும் அளற்றழுங்குவான் என்னும்

பிரபுலிங்கலீலையின் கருத்துப்படி பரலிங்கமாகிய கடவுளும் சரலிங்கமாகிய அடியார்களும் ஓரே தன்மையுடையவர்கள்.

அஃதெப்படியெனில், நெருப்பைச்சேர்ந்த இரும்பு முதலிய பொருள்கள் நெருப்புமயமாகிவிடுவதுபோல் கடவுளைச்சேர்ந்த அடியார்களும் கடவுளே. இங்ஙனமின்றி, அவர்வேறு இவர் வேறு என்று எண்ணுபவர்கள் நிரயவாழ்வுக்காளாவார்கள். ஆகையால் கடவுளுக்குப் பசிதீர்க்க எண்ணியவர்கள், அடியார்களைக் கவனித்து உபசரித்தால் அவர்கள் விரும்பிய எண்ணங்கள் கைகூடும் அல்லவா ?

### திருமந்திரம்.

ஏறுடையாயிறை வாவெம்பிரானென்று
நீறிடுவோரடி யார்நிகழ்தேவர்கள்
ஆறணிசெஞ்சடை அண்ணலிவரென்று
வேறணிவார்க்கு வினையில்லைத்தானே.

அகரம்ஆயிரம் அந்தணர்க்கீயிலென்
சிகரம்ஆயிரம் செய்துமுடிக்கிலென்
பகரும்ஞானி பகலுண்பலத்திற்கு
நிகரில்லையென்பது நிச்சயந்தானே.

ஆறிடும்வேள்வி அருமறைநூலவர்
கூறிடும்அந்தணர் கோடிபேருண்பதில்
நீறிடும்தொண்டர்கள் நினைவின்பயனில்லை
பேறெனிலோர்பிடி பேறதுவாமே.

### பட்டினத் தடிகள்.

பருத்திப் பொதியினைப்போலே வயிறு பருக்கத்தங்கள்
துருத்திக் கறுசுவைபோடுகின்றார் துறந்தோர்தமக்கு
வருத்தி அமுதிடமாட்டார் அவரையிம் மாநிலத்தில்
இருத்திக் கொண்டே னிருந்தா யிறைவாகச்சியேகம்பனே.

### பெரியபுராணம்.

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலா ரடியார் தமையமுது செய்வித்தல்
கண்ணினாலவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மையா மெனினுலகர் முன்வருகென வுரைத்தார்.

## சிவபூசையும் அடியார்வருகையும்.

திருவள்ளுவநாயனர் வாசுகியை விவாசஞ்செய்து இல்லற தருமம் நடத்தற்பொருட்டு, செய்தல் தொழில் பாபமில்லாதது என்றுணர்ந்து ஏலேலேசிங்கன் என்னும் வர்த்தகனிடத்தில் நூல் வாங்கி ஆடைநெய்து அதன் கூலியால் சீவனம் செய்துவந்தார். அவ்வாறுய நாட்களுள் ஓர்நாள் நூல்வாங்கும்பொருட்டு, ஏலேலேசிங்கன் வீட்டுக்குப்போய் செட்டியார் எங்கே? யென்று கேட்க, அவர் சிவபூசைசெய்கிறார் என்றார்கள். அவர் சிவபூசை இங்குசெய்கிறாரோ? கும்பத்திற்செய்கிறாரோ? என்ன, அதை அவர்பத்தினி உள்ளேபோய் அவருக்குச்சொல்ல, அவர் கேட்டுச் சிவபூசையைவிட்டுத் திடுக்கிட்டோடிவந்து நாயனருடைய உபய பாதங்களில்வணங்கி, சுவாமி! அடியேன்செய்த சிவபூசையின் பயனக எழுந்தருளிவந்த தேவரீரது உண்மையையறியாமல், மீட்டும் சிவபூசை செய்துகொண்டிருந்த என்னைப் பந்தசாகரத்தி னின்று எடுத்துக் கரையேற்றவேண்டுமென்று விண்ணப்பிக்க, அவரது பக்குவத்தைப்பரிசோதித்து ஞானேபதேசஞ்செய்தனர்

கலியாணபுரத்துக்கு அதிபதியாகிய விச்சலமன்னவனுக்கு பிரதம மந்திரியாகவும் நந்தியினது அம்சமாகவும் விளங்கிய வசவேசர் அடியவர்கள் வேண்டியபொருள்களைக் கொடுத்துத் தாய்போல் ஆதரித்துவந்தனர். அன்றியும் அடியார்கள், சிறப் போடு வந்தாலும் அருவருக்கத்தகுந்த கோலத்தோடுவந்தாலும், அவர்களுடைய சாதிபேதம்முதலியவற்றைக்கருதாமல், சிவனடி யாரைச் சிவபெருமானகவேபாவித்தனர்.

### பிரபுலிங்கலீலை.

பலரொடு வரினுமெள்ளும் படிதனிவரினுமிக்க
நலமொடு வரினுமேனி நலமறவரினுஞ் சீர்சால்
மலைமகள் கணவன் தொண்டர் வரவு கண்ணுறின் எதிர்ந்து
நிலமிசை வணங்கியஞ்சி நின்று நன்றாற்றும் நந்தி.

(இன்னும் வரும்) மணிமுத்து நாயகம்.

## காலையில் எழுந்திருத்தல்.

"வைகறைத் துயிலெழு" என்று ஔவை கூறிய நீதிச் சொல்லின்படியே நாம் தினந்தோறும் உதயகாலத்தில் படுக்கையைவிட்டு எழும்படி அப்பியாசம் பண்ணவேண்டும். ஏனெனில், நேரஞ்சென்று எழுந்தால் அன்றெல்லாம் நமது உடம்பு சோம்பலாக இருக்கும்: அன்றியும், புத்தி கூர்மையும் படிக்க மனவிருப்பமும்இரா: பசியும் நன்றாகஉண்டாகாது. நாம் சோம்பலையுடையவர்களாக இருந்தால், எந்த வேலையையும் நன்றாகவும் விரைவாகவும்செய்து முடிக்குஞ் சக்திஉண்டாகாது: ஒருநாளிற் செய்யும் வேலையை ஒன்பதுநாளிற் செய்யவேண்டிவரும். புத்தி கூர்மையில்லாவிட்டால், எதையும் திறமாகச்செய்வதற்கு நமக்கு நல்லயுத்தி தோன்றாது. இந்தச்சோம்பலும் மந்தபுத்தியும் நம்மிடத்தில் இருக்குமளவும், எவ்வித முயற்சியையும் செய்ய முடியாது. முயல ஆரம்பஞ்செய்தாலும், நாளைக்குச் செய்வோமென்றுஎண்ணிக் காலத்தைவீணிலே கழித்துவிடுவதன்றியும், மனத்தில் தரிக்கமாட்டாது. இப்படி இளமைப்பருவமெல்லாங் கழிந்துவிட்டால், பின்பு முதிர்ந்தவயதில் நாம் மிகுந்த மூடர்களாகி யாதொருவேலையுஞ்செய்யச் சக்தியில்லாதவர்களா யிருப்போம். பசியில்லாமலிருந்தால் நம்முடைய நாவிற்கு உணவு ருசியாக இராது. உணவு ருசியா யிராவிட்டால், நாம் அதனை அளவிற் குறைத்து உண்ணும்படி நேரிடும். இப்படிச் சில நாள் வரைக்கும் அசனத்தைக் குறைத்துக்கொண்டேவந்தால், நமக்கு பசித்தீபனம் அடங்கிப்போவதல்லாமலும், தேகத்தில் இரத்தங் குறையும். அதனால் கை கால் முதலாகிய அவயவங்ளுக்கு வலி குறைந்துவிடும்.

திருக்குறள்.

நெடுநீர்மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக்கலன்.

இதன்கருத்து தாமதமும் மறதியும் சோம்பலும் தூக்கமும் கெடுவாரேறு மாக்கலம் என்பதாம்.

நாம் வைகறையில் எழுந்திருக்க வேண்டுமென்று விரும்பினுல், இரவில் சரியாகப் பத்துமணிக்குப் படுத்துக்கொள்ள வேண்டும். அதனுல் கண்களுக்குச் சௌக்கியமுண்டாகும். நாம் பத்துமணிக்குப் படுத்துக்கொண்டால், நமக்குநித்திரைவர பதினெருமணியாகும். அந்தப் பதினெருமணிமுதல் காலையில் நான்குமணிவரைக்கும் நித்திரைசெய்தால், அந்தக் காலம் நம்முடைய சரீர சௌக்கியத்திற்குப் போதுமானதாக இருக்கும். வைத்திய சாஸ்திரிகளும் அந்தக்காலம் போதுமானதென்றும், அதற்குமேல் நித்திரைசெய்தல் வியாதியை விளைக்குமென்றும் சொல்லுகிருர்கள். காலையில் நான்குமணிக்கு எழுந்திருப்பது முதலில் வருத்தமாகஇருக்கும். ஆயினும் எழுந்துகொள்ளப் பழகிவிட்டால், அது பின்பு நமக்குச் சகல நன்மைகளையும் உண்டாக்கும். நாம் முதலில் காலையில் எழுந்திருக்கவேண்டுமென்றுஉறுதிசெய்துகொண்டால், படுக்கைக்குப்போகும்போது நம்முடைய தாய் தகப்பன் சகோதரன் சகோதரி முதலானவர்களுக்காவது, அல்லது கடவுள் கிருபையால் நமக்கு ஒரு வேலைக்காரனிருந்தால் அவனுக்காவது, அல்லது காலையில் நான்குமணி சமீபித்தவுடனே நம்மை எழுப்பும்படி சொல்லிவைக்க வேண்டும். அப்படி எழுப்பும்போது, இரண்டு மூன்று நாளளவும் அவ்வேளையில் நமக்கு மனவருத்தமுண்டாயிருக்கும். அந்த வருத்தத்தினுல் அவர்கள்மேல் நாம் சீற்றங்கொள்ளலாகாது. நாம் அப்படிச்செய்தால் அவர்கள் அப்பால் நம்மைஎழுப்ப விரும்பார்கள். அல்லது அலாரம் டயம்பீஸ் எச்சரிக்கைக் கெடியாரத்தை தலைமாட்டின் சமீபத்தில்வைத்தாவது நம்மை நாமே எழுப்பிக்கொள்ளல் வேண்டும். எழுந்தவுடனே மறுபடியும் சற்று படுத்துக்கொள்ள மனவிருப்பம் உண்டாகும். அப்படிச் செய்யாமல் படுக்கையைவிட்டு எழுந்தவுடனே சீக்கிரத்தில் அப்புறம்போகவேண்டும். இப்படி இரண்டு மூன்று நாளைக்கு எழுந்தால், பின்பு அந்தவேளைக்கு, ஒருவருடைய ஒத்தாசையும் இல்லாமல், நாமே எழுந்துகொள்ளும் வழக்கம் உண்டாகும். இப்படிப்படுக்கையைவிட்டுக்காலையில் நான்குமணிக்குஎழுந்தால்

நாள்தோறும் பதினெட்டுமணி அவகாசம் நமக்கு இருக்கும். அப்படிச்செய்யாமல், இரவில் எட்டுமணிக்குப் படுத்துக்கொண்டு காலையில் எட்டுமணிக்கு எழுந்திருப்போருடைய வழக்கத்தை நாமும் அனுசரித்துவந்தால், கடவுள் இந்தஉலகத்தில் வாசஞ் செய்யும்படி நமக்குக் கொடுத்திருக்கும் நாட்களிற் பாதிநாள் நித்திரையிற் கழிந்துபோகும். மற்றப் பாதிகாலத்திலும் நோய் குழந்தைப்பருவம் முதுமைப்பருவம் முதலானவைகளாற்கழியும் நாட்கள்போக மிகவுங் கொஞ்சகாலந்தான் நமக்கு மீதியாகக் கிடைக்கும். அந்தக் கொஞ்சகாலமும் அதிசீக்கிரத்திற் கழிந்து போகும் கடைசியிற் போனகாலத்தைக் குறித்து நாம் வியசனப்படலாகும். அந்த வியசனம் அதை மீட்டுக்கொடுக்க மாட்டாது அநேகமனிதர்கள் தங்கள் அந்தியகாலத்தில் தமது நாட்களெல்லாம் வீணாகக் கழிந்தனவே என்று வியசனப் படுகிறார்கள். அதனாற் பயன் ஒன்றுமில்லை.

மனிதர்க்கு வயது நூறல்ல தில்லை
ஐம்ப திரவி லகலுந் துயிலினால்
ஒட்டிய விளமையா லோரைந்து நீங்கும்
எழுபது போகநீக் கிருப்பன முப்பதே.

அவற்றுள்,

இன்புறு நாளுஞ் சிலவே யாதாஅன்று
துன்புறு நாளுஞ் சிலவே யாதலால்
நன்றே செய்யவும் வேண்டு நன்றும்
இன்றே செய்யவும் வேண்டு மின்றும்
இன்னே செய்யவும் வேண்டு மின்னும்
நாளை நாளை யென்பீ ராகில்
எப்போ தாயினுங் கூற்றுவன் வருவான்.

ஆதலால் நாம் முன்னமே சாக்கிரதைப்பட்டு, தினந்தோறும் காலையில் எழுந்து காலத்தை வீணாகக் கழிக்காமல் நல்லவிஷயத்தில் உபயோகித்தால், நம்முடைய முடிவுகாலத்தில் நாம் வியசனப்பட இடமிராது. அதிகாலையில் விழிப்பதைக் குறித்து மகாசித்தராகிய தேரையரும் அடியில் வருமாறு கூறியிருக்கின்றனர்.

புத்தி யதற்குப் பொருந்து தெளிவளிக்கும்
சுத்த நரம்பினாற் றூய்மையுறும்—பித்தொழியும்
தாலவழி வாதபித்தந் தத்தநிலை மன்னுமதி
காலைவிழிப் பின்குணத்தைக் காண்.

நித்திரையானது அவரவர் தேகக் கூறுபாட்டினுக்கே இயையுமெனினும், சராசரி ஏழுமணி நேரமே தூக்கத்தின்கண் செலவிடப்படல் வேண்டும். ஆகவே வைகறைத்துயில் எழ வேண்டுவது பெற்றாம். விடியற்காலையில் 5-மணி சுமாருக்கு எவரும் எழுதல் வேண்டும். எழுந்ததும் சிறிதுநேரம் தம் இஷ்டதெய்வத்தைப் போற்றித் துதித்தபின்புதான் காலைக்கடன் களைச் செய்ய முற்படவேண்டும். விடியற்காலையில் துயில் நீத்ததும் மனங் களங்கமற் றிருக்குமாதலின் மாணவர் தத்தம் பாடங்களைப் படிப்பதில் அக்காலை தம் கவனத்தைச் செலுத்துவ ராயின் யாவும் மனதிற்படிய இன்புறுவர். அந்தணோத்தமர் இக் காலத்தை வேதாத்யயனத்தில் செலவிடுவர். அன்றியும், விடியற்காலமே தேகாப்யாசத்திற்கும் சிறந்தகாலம். ஆகவே யாவரும் தேகாப்பியாசம் செய்யின் நல முறலாம். தேகாப்பி யாசம் செய்யாவிடின், சில மைல்கள் தூரம் நடப்பதால் எய்தக் கூடிய அளவிறந்த நன்மை வரையற் பாலதன்று. அவரவர் அனுபவத்தில் அறியத்தக்கதே. "வைகறைத் துயிலெழு" என்பது பெரியோர் கட்டளையாவதன்றி, அஃதே கடவுளின் ஆணையும் ஆகும் என்பதைக் கோழி, காகம் முதலிய பறவைகள் அக்காலையில் நம்மைக் கூவி எழுப்புவதனால் அறிக. விடியற் காலத்தில் படுக்கையைவிட்டு எழ மனமில்லாதோர் எய்தும் கேடுகள் பல. வேலைகளைச் சுறுசுறுப்பாய்ச் செய்தற்குரிய அருமையானகாலம் வீணே கழிந்தொழிவதுந் தவிர, மல மூத் ராதிகள் பிரியவேண்டிய சமயமான அக்காலத்தில் படுத்துறங் குவதால், அவைகளுந் தடைப்பட்டுப் பல கொடிய நோய்களையும் அடையவேண்டியது நேரிடுகின்றது. விடியற்காலத்திற் கண் விழித்துச் செய்யவேண்டிய கருமங்களைக்குறித்து,

"வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து—வாய்வதில்
தந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை"

என ஆன்றோர் வகுத்தருளினர். மற்றும் நித்திரை சரிவரப் பிடிக்காது அலக்கண் எய்துவோரும் அதிகாலை விழித்தெழும் வழக்கத்தை மேற்கொள்ளின் சுகமான அனந்தல் பெற்றின்புறுவர். அன்றி சாராயம், பூராணுதிலேகியம் இவற்றை உண்டு செயற்கை நித்திரையை வருவித்துக் கொள்ளுவோர் கட்டாயம் பெரிதுந் துன்புறுவர். எவ்விடத்தும், எக்காலத்தும் இயற்கையான கண்படலே நன்மை பயப்பதாம் என்பதை எவரும் செவ்விதின் உணரவேண்டும். "பொழுதோடு படுத்துறங்கிப் பொழுதோடு எழுவதால் ஆரோக்கியமும், ஐசுவரியமும், மனத்தெளிவும் உண்டாகும்" என்றது ஓர் ஆங்கிலப்பழமொழி. அன்றியும் இம்முறை அனந்தலாடலால் பகற்காலத்தில் தொழில் செய்திளைத்த கருவிகள் யாவும் தத்தம் களையொழிந்து சுகமுறுவதுந் தவிர, புலன்வழிச் சென்று அலைபட்ட மனமும், சரீரமும் செம்மையை அடைகின்றது.

சே. மு. அஃமத்தம்பிப்பாவலர்,
பேருநாழி.

## HOW TO PROGRESS?
### முன்னுக்கு வருவதெப்படி?

காரணப்பொருள் ஒன்றானாலும் அதை எவ்வளவு விசித்திரமாகவும் விநோதமாகவும் அருமையாகவும் காரிபப்படுத்துகின்றோமோ அவ்வளவுக்கும் பலபேதமாகி விலையேறிக்கொண்டே வருகிறது. 10-ரூபா விலையுள்ள உயர்ந்த மல்பீசு ஒன்றில் அரைரூபா பஞ்சுதானிருக்கும். மல்பீசு காரியம், பஞ்சுகாரணம். காரணம் அரைரூபா, காரியம் 10 ரூபா. காரிபப்படுத்துவதில் இவ்வளவு இலாபமிருக்கிறது. இவ்வாறே ஒவ்வொரு பொருளினையும் ஆராய்வோமானால் அளவிறந்த ஆதாயமிருக்கிறதாய் அறிவோம். காரணமோ நமது தேசத்திலிருக்கிறது. இருந்தும்

பயனில்லை. காரியப்படுத்த நம்மாலாகாமையாலென்க. நமது தேசத்திலிருந்து காரணப்பொருளை அன்னியர் சுலப விலைக்கு நம்மிட மிருந்தே வாங்கிக் கொண்டுபோய்க் காரியப்படுத்தி மீண்டும் நமக்கே கொண்டுவந்து விற்க, நயம் நயமென்று வாங்குகிறோம். ஐரோப்பியர் ஒவ்வொரு துறையிலுமிறங்கி ஒவ்வொரு பொருளையும் விநோதமாகவும், விலை சுலபமாகவும், மோகிக்கத் தக்கதாகவும் சும்மா போகிறவர்களும் வாங்கத்தக்கதாகவும் செய்துகொண்டு வருகிறார்கள். ஒரேபொருளை இன்று ஒரு மாதிரியாகவும் நாளை வேறு மாதிரியாகவும் மற்றொருநாள் மற்றொரு மாதிரியாகவும் செய்கின்றமையால் ஒவ்வொருவரும் மாதிரிக்கு ஒன்றாகப் பிரிதியோடு பலவற்றையும் வாங்குகின்றார்கள். இதனால் அத்தேசத்தார்க்கு மேன்மேலும் ஆதாயத்துக்கு இடமாகிறது. நமக்கு நஷ்டமாகின்றது.

5-ரூபா விலையுள்ள இரும்பைக் குதிரைலாடமாகசெய்தால் 10-ரூபாயாகவும், அவ்விரும்பை ஊசியாக்கினால் 385 ரூபாயாகவும், பேனாக்கத்திகளாக்கினால் 3,285 ரூபாயாகவும், கடியாரங்களுக்குத் தராசு விசையாக்கினால் 250,000 ரூபாயாகவும் ஆகின்றன. காரிய வேறுபாட்டினால் அதிலும் அதிக நுட்ப வேலைகளினால் 5 ரூபா காரணப்பொருளை இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு விற்கின்றனர் யார்? ஐரோப்பியரும் அமெரிக்கரும் அவைகளை வாங்குகின்றனர் யார்? நாமும் நம்மை போன்ற பிறதேசத்தாருமாம். அவர்களைப்போல் நாமும் காரணத்தைக் கொண்டு காரியத்தைச் செய்ய முயலுவோமாயின் அவ்வித பெருத்தலாபத்தை நாமடையக்கேட்கவேண்டுமா? அவ்வாறு செய்யப் புறப்படின் தடை செய்வார் ஒருவருமில்லை. அப்படியிருந்தும் நாம் சோம்பேரிகளாய்த் தூங்குவது நன்றாமோ?

நமது தேசத்திற்கு வேண்டியநூல் வஸ்திரம், காகிதம் மை, அச்சியந்திரசாமான்கள், உலோகப் பொருள்கள், பீங்கான் கண்ணாடி, தச்சன், கருமான், தட்டான், கொல்லன், முதலிய கைவினையாளர் கைகளிலுள்ள ஆயுதங்கள், சரிகை மருந்து

முதலிய அளவற்ற காரியப்பொருள்களை நாம் வேறுவேறு தேசத்தாரிடம் வாங்கிக்கொள்கின்றமையால் இந்துதேசக் கைத்தொழிலாளிகள் பிழைப்பின்றி வருந்தி விசனமிடுகின்றார்கள். அவர்களைவாயில்லாப்பூச்சிகள், நிரக்ஷரகுக்ஷிகள்என்னசெய்வார்கள்? தேசத்தில்பிழைப்புமட்டுப்பட்டுஜனங்கள்துன்புறுவார்களேயானால் அவர்கள் க்ஷேமப்பட்டு வாழும்படி செய்யவேண்டியது யார் கடமை? பரோபகாரமுள்ள தனவான்கள், கல்விமான்கள் கடமையன்றோ? அவ்வாறு யாராவது நமது தேசத்தில் செய்கின்றார்களா; தாங்களும் தங்கள் பந்துமித்திர புத்திர களத்திராதிகளும் சுகமாகவாழக் கருதுகின்றார்களேயன்றி, கைவினையாளரான ஏழைகள் முகம் பார்க்கிறார்களா? அவர்கள் நிர்ப்பாக்கிய நிலைமையைப்பற்றி அனுதாபப்படுகின்றார்களா? ஐரோப்பா அமெரிக்காவிலுள்ள பலதேசத்தார் ஜனங்கள் சுகத்தின்பொருட்டு எவ்வளவு பிரயாசைப் பட்டார்கள்? எத்தனையோபேர் உயிரைக் கொடுத்தார்கள்? அவர்கள் பேர் இன்னும் எப்படிப் பிரகாசிக்கின்றது பாருங்கள்? அந்தத்தேசத்தார் உயிரைக் கொடுத்தாவது ஜனங்கள் சுகத்தைத்தேடுவதும், நாம் உயிரை வெல்லமாக நினைத்து நம்மையும் நம்மவரையும் மாத்திரம் பாதுகாத்துக் கொள்ளுவதும் வெகு அழகா யிருக்கின்றது! நமது தேசத்து நிரக்ஷரகுக்ஷிகளும், சுதேச பாஷா வித்துவான்களும் முன்னுக்கு வராவிடினும் தற்கால லௌகிக ஞானத்தில் தேர்ந்த இங்கிலீஷ்பட்டதாரிகளும் வாளாவிருப்பதுநன்றாகுமா? அவர்கள் ஜன நன்மையின் பொருட்டு உழைப்பதாய் அன்று வாக்குறுதி செய்ததை மறந்தனரோ? அவர்கள் வாசித்துப் பட்டம் பெற்று உயர்ந்த நிலைமைக்கு வந்தது யாராலெனச் சிறிது யோசிப்பாரானால் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தச் சிந்தக் கஷ்டப்பட்டுத் தேடிய அற்ப பொருளிற் பற்பல வரிகளின் மூலமாய்க் கவர்மெண்டுக்குக்கொடுத்த பணத்தினாலென வெளியாகும். ஷெ ஏழைகளால் நல்லநிலைமைக்கு வந்தோமென்று அவர்கள் அறியாமற் போகவில்லை, அறிந்தும் ஜனோபகாரத்தின்பொருட்டு அநேகர் உழைப்பதேயில்லை. அப்படி அவர் இருந்துவிட்டால் மற்றவர் முன்னுக்கு வருவதெப்படி?

இங்கிலீஷ்வாசித்த ஏழைகள் கவர்ன்மெண்டு உத்தியோகத்திற் செல்ல வேண்டுவது அவசியமேனும் திரவியவான்களுடைய மக்களும் ஏன் உத்தியோகத்தில் செல்ல வேண்டும்? வியாபாரம் விவசாயம் முதலியவற்றைச் செய்யப்படாதா? பல பேராகச் சேர்ந்து கைத்தொழில் யந்திரசாலைகள் வைத்து லக்ஷக் கணக்கான ஏழைகளுக்கு நித்திய ஜீவனமான வேலை கொடுக்கப் படாதா? நமது தேசத்தில் எத்தனையோ வேலைதெரிந்த கம்மாளர் கையில் பணமில்லாமையாலும், உதவிசெய்வார் இல்லாமையாலும் பெரிய வேலைகள் செய்யக்கூடாமலிருக்கின்றார்கள்.

சாரணப்பொருளை வைத்துக் கொண்டிருந்தும் அதைக்காரியப்படுத்திப் பிழைக்க வகை தெரியாமல் அதைப் பிறர்க்கு வலியக் கொண்டுபோய்க் கொடுத்து விட்டு, பிறகு அவர்கள் என்று காரியப்படுத்திக்கொண்டு வருவார்களென எதிர்பார்த்து, கொண்டுவந்தபின் (ஒன்றுக்குப் பத்துப்பங்கு அதிக விலையாயினும்) நயம் நயமென்று வாங்கும் புத்தியீனம் எதுவரையிலிருக்கின்றதோ, அதுவரையில் நாம் தரித்திரராகவேயிருப்போமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலால், அத்தரித்திரம் நம் நாட்டைவிட்டு ஒட்டக் கல்வி, அறிவு, பரோபகாரம், பொருள் இவைகளை யுடையவர்கள் சிந்திக்க வேண்டுவது அத்தியாவசியமாம்.

இ. ன்.

## முகம்மது நபி சரித்திரம்.

### நகரச்சிறப்பு.

முதல் மலர் (93-ம் பக்கத் தொடர்ச்சி.)

அவ்வித மாட்சிமை பொருந்திய அறபு நாட்டில் மேகமண்டலத்தை யளவளாவி நிற்கும் பலவித விருட்சங்களின் பரிமள மிகுந்த புட்பங்களிலிருந்து இனிய தேன்துளிகள் வடிந்து பெருக்கெடுத்து வாழை, கமுகு, தெங்கு, கரும்பு, செந்நெல் முதலியவை செழித்தோங்கி வளரும் கழனிகளுக்கு அழகிய செந்தாமரைத் தடாகங்களிருந்து பாயும் தெண்ணீர்வாய்க்கால்

களின் மடையை உடைத்துவிடாதபடி புள்ளிகளையுடைய ஆறு காலவண்டினங்கள் ச ரி க ம, ப த, நி, என்னும்ஏழிசைகளோடு மோகனம், முகாரி முதலிய இன்னிசைகளைப்பாடி ரீங்காரஞ் செய்துகொண்டே அந்த மலர்களின் மகரந்தப்பொடியென்னும் பூந்தாதுகளை யுதிர்த்து தேனைக் கசிபவிடாதபடி கலந்துகொண் டிருக்கவும், அதைக் குல்கந்து என்று கண்டோரெடுத்துப் புசித்து சரீர வெப்பம் தணந்து புளகாங்கிதமுறவும், பஞ்ச வர்னக்கிள்ளைகள் தமது பேடுடன் கொஞ்சிக் குலாவிவிளையாடா நிற்கவும், கரிய அந்தகாரமானது இதுவே நமக்குத் தகுதி யான வுறைவிடமென்று குடியிருக்கவும் பெற்ற அழகிய பசிய பூஞ்சோலைகளும், மயில்கள் தமது சித்திரக்கலாபத்தை விரித்து விளையாடாநின்ற தெருவீதியாகிய திருவீதிகளும் நிறைந்து அவ்வறபுநாடென்னும் கண்மணியினது பிரகாசமாக விளங்கும் பூமிக்குநடுத்தலமான திருமக்கமாநகரத்தில் அவதரித்து திருமதீனு முநவ்வரில் அரசாட்சி புரிந்து தீனுல் இஸ்லாமென்னும் மோட்சப்பயிரை விளைவித்துப் பரிபாலனம் புரிந்த நபிகள் பெருமான் செய்யிதுல்ஹறமைன் ஷபீகுல்முதுனபீன்காத்திமுல் லன்பியா ஹபீபுறப்பில்ஆலமீன் அகுமது முகம்மது முஸ்தபா இறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுடைய தலைமுறை யினது விபரங்களை விளக்கமாகச்சொல்வாம்.

## மூலபிதாவாகிய ஆதம் (அலை) அவர்கள் உற்பத்தி.

ஆதிமந்தியந்தமில்லா அகண்ட பரிபூரணானந்த அருட் பெருஞ்சோதித்தனிப்பெருங்கருணை ஆனந்தசின்மய சிதாகாயப் பழம்பொருளாகிய எல்லாம்வல்ல இறைவனான அல்லாகுத்தாலா வென்னும் காரணக்கடவுளானவர் நெடியகடல் புடைசூழ்ந்த இந்தப் பூலோகத்தின்கண் நாயகம் கைம்மாறுகருதாத தாயகம் முகம்மதுமுஸ்தபா இறசூல் சல்லல்லாகு அலைவசல்லம் அவர்களை விளக்கஞ்செய்ய நினைந்து மூலபிதாவாகிய நபி ஆதம் அலைகிஸ் ஸலாம் அவர்களை உலகத்திற்கு முதன்மனிதராகப் படைப்பதற்கு மண் எடுத்துக்கொண்டு வாருமென்று முதன்மையான மலாயி

க்கத்து (தேவதூதர்)களில் நால்வருள் ஒருவராகிய இசுறாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குக் கட்டளையிட அங்ஙனமே மண்ணெடுத்துச் சென்றனர்.

அதன்பின் எல்லா நபிகளுக்கும் முதல் நபியாகவும் கடைசி நபியாகவும் விளங்கிய முகம்மதுநபி அவர்களின் திருமேனியை வகுக்க நினைந்து விரைந்து மண் எடுத்துக்கொண்டு வாருமென்று தேவதூதர்களில் முதன்மையராகிய ஜிபூறீல் அலைகிஸ்ஸலாம் அவர்களுக்குக் கட்டளையிட அவர்கள் மதீனமாநகரத்தின் பரிசுத்தமான ஒரு தலத்தில் மண்ணெடுத்துச்சென்று அதைச் சுவர்க்கலோகத்தின் பரிமளமிகுந்த நிர்மலமான நீரோடும் நதிகளெல்லாவற்றிலும் கழுவி ஆண்டவன் சன்னிதானத்தில் வைத்தார்கள். அந்தமண் கிரணங்களை வீசிப் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

கடவுளானவர் ஒளிபொருந்திய அந்த மண்ணை ஆதமலைகிஸ்ஸலாம அவர்களது மண் வடிவத்தின் முதுகிலிருக்கச்செய்து தனது ஜலால், ஜமால் என்னும் தெய்வீகந்தங்கிய திருக்கரங்களினால் சிருஷ்டித்து அச்சரீரத்திற்குள் உயிரை விட்டனர் அவ்வுயிர் மூளையில் தோற்றமாகிக் கலிமாவை ஓதினது. பின்னர் கண்களிலிறங்கி சொர்க்கலோகத்தின் வாசல்மேலுள்ள கலிமாவைப்பார்த்து முகத்திலிறங்கித் தும்மலையுண்டாக்கி வாயைத் திறந்து "அல்கம்ந்து" என்னும் வேதவாக்கியத்தைச் சொல்லிற்று அதற்குப் பிரத்திகூறிய கடவுள் தெய்வீக வசனத்தை நோக்கி ஆண்டவனை தோத்திரஞ்செய்து ஆதமலைகிஸ்ஸலாமவர்கள் பின்வருமாறு சொல்ல ஆரம்பித்தார்கள்.

(இன்னும் வரும்) மணிமுத்து நாயகம்.

## வைத்தியம்.

(216-ம் பக்கத் தொடர்ச்சி.)

புளியஞ்சிறுகீரைக்கு அஞ்சனகல் நீறும். பணவிடை தேனிற்கொள்ள மேகநீரிழிவு (20) ம் தீரும்.

வெப்பாலை மணலி காட்டாமணக்கின் முத்துப்பருப்பு இரத்தமண்டெலி, பால்வீழி இவைகளுக்கு இரும்பு உருகும்.

கிளுவை மருதோன்றி நெல்லி, வன்னி நௌவல் திரிபுர மெரித்தான் இவைகட்கு இரும்பு செம்பாம், பால்விழிவேருக்கு இரும்பு பற்பமாகும்.

பொற்றலை, கரிப்பான், சிறுசெருப்படை, பெரும்பூசிணிக் காய், நௌவற்பட்டை, எலுமிச்சம்பழம், புளிப்புமாதுளம்பழம் கற்றாளை இவைகளுக்கு அயம் செந்தூரமாகும். அனுபானத் தின்விட பாண்டு சோகை, காமாலை, குறைநோய், குஷ்டம், சூலை நீங்கும்.

சிறியாநங்கை, காட்டுக்கொள்ளிலை இவைகளுக்கு காந்தம் பற்பமாம். அயத்துக்கு சொல்லியிருக்கிற மூலிகையால் இது செந்தூரமாகும். பாண்டு முதலிய வியாதிகள் தீரும். தேக பலமுண்டாம். கடுகுரோணம் இவைகளுக்கு காந்தம் பற்பமாம் உபரசம் சத்தாகும்.

காட்டுக்கொள்ளிலைக்கு சகலமும் சத்தாகும். ஷ்டி சாற் றுக்கு பாஷாணம் நவலோகம் சுத்தியாகும். நீலக்குரோசணிக்கு பித்தளைஊரல் போம். வெடியுப்பு செந்தூரமாகும்.

சொறிசுணங்கிக்கு மண்டூரம் பற்பமாகும். பாண்டுவகை கள் தீரும்.

நிலக்கடம்பு, காட்டுக்கொள்ளிலை, காட்டாமணக்கின் வித்து மிருதாரசிங்கி, பாஷாணம், பூமிவேர், வெங்காரம், உருக்கின குடோரி, நீலரெங்கு, சாரம், வெடியுப்பு இவைகளுக்கு அப்பி ரகம் சுத்தமாகும்.

ஆவாரம்பட்டை, அரசம்பட்டை, நௌவற்பட்டை, நெல் லிப்பட்டை, கற்றாளைவேர், பொற்றலைக்கரிப்பான், கருந்துளசி, எருக்கம்பழுப்பு, சிவப்புமணத்தக்காளி, சாக்கொன்றைப்

பட்டை, பிரமதண்டு, கோழிமுட்டை வெள்ளைக்கரு, செங்கிழு வைப்பட்டை, ஆலம்பால், வெடியுப்பு, கெந்தகம் இவைகளுக்கு அப்பிரகம் செந்தூரமாகும். அனுபானத்திலிட மேகம் நீரிழிவு (21)ம் நீங்கும் தேகபலமுண்டாகும்.

எருக்கம்பாலுக்கும், முலைப்பாலுக்கும், சாத்திரபேதிநீறும் முலைப்பாலில்சுரமும், ஆவின்வெண்ணெயில் உஷ்ணமுந்தீரும்.

பன்றிப்பாலால் வெள்ளைக்குங்கிலியத்தை நீற்றி ஆவின் வெண்ணெயிற்கொள்ள அபானக்கடுப்பு உளைவுதீரும். அதைப் பற்றுலக்கிவர பல்லசைவும், பல்லில் இரத்தம் சிவடிதல் பற் புண் தந்தவாயு தீரும்.

சங்குக்குகையிற் பொரிகாரத்தை நீற்றி அனுபானத்திற் சாப்பிட நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, நீர்க்கருப்பு, நீர்ச்சிறுப்புநீங்கும்.

பெண்கள் சுரோணிதத்தாலும் பிரண்டைச்சாற்றாலும் வயி ரத்தை நீற்று அனுபானத்திலிட தேகபலமுண்டாம்.

பவளம்போன்ற உழுரிக்கு மற்ற இரத்தினங்கள் நீறும் சகலவியாதியுந்தீரும்.

அண்டவெள்ளைக்கருவால் முத்தைநீற்றி அனுபானத்தி லிட கபம், பித்தமேகம், நீரிழிவுதீரும். அதைத் தாம்பூலத்தி லருந்தப் பல்வலிதீரும் பல்லிறுகும்.

இலந்தை, கற்கண்டு, கீழ்காய்நெல்லி, முயலிரத்தம், சடா மஞ்சி, இவைகட்கு பவளம்நீறும். அனுபானத்திலிட மேக காங்கை கபந்தீரும்.

அபின், வன்னிப்பட்டை, ஆவாரை மேனி, இஞ்சி, பிரண்டை இவற்றால் உப்பைக் கட்டிநீற்றி அனுபானத்திலிட வாயு, பாரிசவாயு, சூலை, மகோதரந்தீரும்.

அரசம்பட்டைச்சாற்றில் பொன்னிமிளையை யரைத்து நீற்றி அனுபானத்திலிட வாயு, குன்மம், சூலைக்கட்டி, கண்டவிப் பருதி. காமாலை அரையாப்புதீரும்.

நாங்குளப்பூச்சிபை அரைத்து ஆமைபோட்டிற்கு கவசம் செய்து புடம்போட்டு நீற்றிக் கண்ணிலிட கண்ணோய் (96) ம் தீரும்.

கருவாகை, சிறியவாளுளுவைத்தயிலம், கருத்தமணத்தக்காளி மிளகாயிலை, வில்வம், இவற்றின் சாற்றிலும் ஆவின்நெய்பாலிலும் கெந்தகத்தை உருக்கிச்சாய்க்க சிறுசின்னியிலையாலாதை நீற்றி அனுபானத்திலிட வயிற்றுவலி, தசைபைப்பற்றிய நீர், குஷ்டம், குறைநோய், சில்விஷம், வாயு வாதநோய்களும் தீரும்.

புளியாரைக்கு வீரம் சுத்தியாகும். நீர்க்கடம்புக்கு வீரம் கட்டும். அப்பைக்கிழங்குக்கு வீரம் பற்பமாகும். முருங்கைப்பூ வேலிபருத்தி, முலைப்பால், இளநீர், தேன் இவைகளுக்கு வீரம் மெழுகாகும். அனுபானத்திலிட குன்மம், வாயு, வாதம், கபம், சன்னி, தோஷம், பாண்டு, சோகை, வீக்கம், சுரங்கள் தீரும்.

அழுகண்ணி தொழுகண்ணி கருவூமத்து பொன்னூமத்து தைவேளை முக்கெருக்கஞ்செவி ஆகாசகருடன் வேலிப்பருத்திப்பால் வெள்ளைவிஷ்ணுக்காந்தை விடத்தை வட்டக்கிலுகிலுப்பை கற்சேம்பை தும்பியிலை சிவகரந்தை வெண்தாமரை கருவீழி வெண்கடம்பு மயூரச்சிகை இவைகளுக்கு இரசங்கட்டி பற்பமாகும். இதியிடை அனுபானத்திலிட சூலை (18) கிரந்தி குஷ்டம், அரையாப்பு, பவுத்திரம், கண்டமாலை, பரங்கிப்புண் தீரும். செந்திராய்க்கு இரசம் செந்தூரமாகும். ஷை வியாதிகள் தீரும்.

கண்டுப்பால் ஈருள்ளிமுலைப்பால் இவைகளுக்கும் பூரம் கட்டும் ஷை வியாதிகள் தீரும். விரோசனமாகும். சுரதோஷம் நீங்கும்.

## நட்சத்திர சுர விவரங்கள் அறியும் விதம்.

| நெ. | நட்சத்திரத்தின் பெயர். | விட்டுப்போகும்நாள் | மரணமாகும் நாள் |
|---|---|---|---|
| 1 | அசுவதி | 8 நாளில விடும | |
| 2 | பரணி | 9 நாளில் விடும் | 8 நாளில் மரணம் |
| 3 | கார்த்திகை | 8 நாளில் விடும் | 21 நாளில் மரணம் |
| 4 | ரோகணி | 8 அல்லது 28 விடும் | |
| 5 | மிருகசிரிடம் | 10 நாளில் விடும் | |
| 6 | திருவாதிரை | 7 மாதத்தில் விடும் | 5-ம் நாள் மரணம் |
| 7 | புனர்பூசம் | 11 நாளில் விடும் | |
| 8 | பூசம் | 2 அல்லது 8 நாளில் | |
| 9 | ஆயில்யம் | | 7 நாளில் கொல்லும் |
| 10 | மகம் | 10 அல்லது 13நாளில் | |
| 11 | பூரம் | 10 அல்லது 11 நாளில் | |
| 12 | உத்தரம் | 3 மாதத்தில் விடும் | 11 நாளில் மரணம் |
| 13 | அஸ்தம் | 8 அல்லது 10 விடும் | |
| 14 | சித்திரை | சாந்தம் | 3-ம் நாளில் மரணம் |
| 15 | சுவாதி | சாதகம் | ஒரு நாள் |
| 16 | விசாகம் | 8 நாளில் விடும் | திங்கள் ஒன்று |
| 17 | அனுஷம் | | 5-ம் நாளில் மரணம் |
| 18 | சேட்டை | | 9 நாளில் மரணம் |
| 19 | மூலம் | 9 நாளில் விடும் | 11 நாளில் மரணம் |
| 20 | பூராடம் | 8 அல்லது 30 நாளில் | |
| 21 | உத்தராடம் | 12 தினத்தில் விடும் | 7 திங்களில்மரணம் |
| 22 | திருவோணம் | | |
| 23 | அவிட்டம் | 8 நாளில் விடும் | 8 தினங்களில்மரணம் |
| 24 | சதயம் | | 10 நாளில் மரணம் |
| 25 | பூரட்டாதி | சாதகமதற்குமேல் | 6 நாளில் மரணம் |
| 26 | உத்திரட்டாதி | 10 நாளில் சாதகம் | 8 நாளில் மரணம் |
| 27 | ரேவதி | 10 நாளில் தெளியும் | 8 நாளில் மரணம் |

## வாரபலன்.

ஞாயிறும் திருவோணமும் கூடியதினம் சுரம் கண்டால் மரணம்
திங்களும் திருவாதிரையும் கூடில் மரணம்
செவ்வாயும் சித்திரையும் கூடில் மரணம்
புதனும் ரேவதியும் கூடில் மரணம்
வெள்ளியும் விசாகமும் கூடில் மரணம்
சனியும் கார்த்திகையும் கூடில் மரணம்

க. ஞானபூபதி.

---

## கச்சியப்ப முனிவரர்.

ஸ்ரீ கைலாசபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள் மரபில் அனுக்கிரகம் பெற்றவருந் தமிழ்ப்பாஷை தழைத்தோங்கும் வண்ணம் அவதரித்த மஹான்களுள் ஒருவருமாய இச் சிரேஷ்டாசிரியர் இற்றைக்கு ஏறக்குறைய நூற்றைம்பது வருஷத்திற்குமுன், தொண்டைமண்டலத்திலே, தணிகைத்திருப்பதியிலே, காஞ்சீபுரத்துப் பரம்பரைச் சைவவேளாளர் குலத்திலே, அபிஷிக்தர் மரபிலே அவதரித்து ஒழுக்கம் அன்பு அருள் முதலிய நற்குணங்களோடு வளருவாராயினர்.

தந்தைதாயர்களால் தக்கபிராயத்திலே வித்தியாரம்பஞ்செய்விக்கப்பெற்றுச்சிறிது கல்விகற்ற அளவிலே, அவர் சிவபுண்ணிய மேலீட்டினாலே, சிவக்ஷேத்திர யாத்திரை செய்யத் தொடங்கினார். தொண்டைநாட்டிலுள்ள சிவஸ்தலங்கள்யாவும் தரிசித்துக்கொண்டு, சோழநாட்டிலே விராட்புருடனுக்கு இருதயஸ்தானமாகிய சிதம்பரம் முதலிய திருப்பதிகளைத் தரிசித்தார். பின்னர் ஸ்ரீ ஞானக்கோமுத்தி, நவகோடிசித்தவாசபுரம், அரசவனம் ஆதியாகிய திருப்பெயர்கள்பூண்ட திருவாவடுதுறையை அடைந்து, மடாலயத்தினுள்ளே புகுந்து, திருக்கைலாச பரம்பரைச் சித்தாந்தசைவ பானுவாகிய ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகளைத் தரிசித்துத், திருவருணோக்கஞ் சித்திக்கப்பெற்று, அப்பொழுது அத்திருமரபிற் சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஞான

சாரியாகிய பின்வேலப்ப தேசிகரை ஒடுக்கத்திலேபோய்த் தரி
சித்துப் பேரன்போடு வணங்கினர். வணங்கியபின் அந்த ஞான
தேசிகரிடத்திற்றானே சைவ சந்நியாசமும் சிவ தீக்ஷையும்
பெற்றுக்கொண்டார்.

இங்ஙனம் சிவதீக்ஷைபெற்ற கச்சியப்பமுனிவர், அகத்திய
மகாருஷியின் வரத்திற்றென்னாட்டில் அவதரித்து, எளி
திலே வடமொழி தென்மொழிக் கடல்கள் கரைகண்டுணர்ந்து,
அவ்வேலப்ப தேசிகராகிய ஞானாசாரியரிடத்தே அனுக்கிரகம்
பெற்று, மெய்யுணர்வின் முதிர்ந்து சித்தாந்த சைவ சிவஞான
யோகீஸ்வரரை வித்தியாகுரவராகக் கொண்டு, அம்மெய்ஞ்ஞான
முனிவரிடத்தே தென்மொழியிலே பல இலக்கண நூல்களும்,
இலக்கியங்களுந் தருக்கமுஞ், சிவஞான நூல்களாகிய மெய்கண்ட
சாஸ்திரப்பதினான்கும் பண்டார சாஸ்திரம் பதினான்கும் மற்றும்
பலநூல்களும் ஓதியுணர்ந்து, கல்விகேள்விகளில் முற்றுப்பே
றுடைய மஹாவித்துவா னெனப்பெயர்பெற்று, அச்சிவஞான
யோகிகளுடைய மாணாக்கராகிய இலக்கணம் சிதம்பரநாதமுனி
வர், தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர், காஞ்சிபுரம் சரவண
பத்தர், சிதம்பர பத்தர், இராமநாதபுரம் சோமசுந்தரம் பிள்ளை
முதலிய பல்லோருள்ளும் மிகச் சிறந்தவராய் வீற்றிருந்தார்.

“இணரூழ்த்து நாறா மலரனையர் கற்றதுணர விரித்துரையா
தார்” எனவும் உய்த்துணர்ந்துஞ்—சொல்வன்மையின்றெனி
னென்றுபரு துடைத்தேற் பொன்மலர் நாற்றமுடைத்து”
எனவும் நாயனாரதியர் கூறியதற்கு இவரோர் இலக்கியமாகத்
திகழ்ந்தனர். இவரது வாக்குவல்லபத்தையும், பிரசங்க சாதுரி
யத்தையும் புகழாதார் இல்லை. இவர் செய்யுளியற்றும் விரைவும்
நெட்டுருப் பண்ணிய பழம்பாடம் ஒப்பித்தல் போல் இருந்த
தென்று சொல்லுவர். இதுமட்டோ? காலம் இடங்கட்குத்
தக்கபிரகாரம் நூதனம் நூதனமான யுக்திகள் வேண்டியவாறு
அவரது வாயினின்றுஞ் சனித்துக்கொண்டிருக்குமானால் அவர்
பெருமை இத்துணைத்தென்று சொல்லற்பாலதா?

பின்பு கச்சியப்பமுனிவரர் சிவபெருமான் அப்புலிங்க மூர்த்தியாக எழுந்தருளியிருக்கப்பெற்ற திருவானைக்காவில் அமர்ந்திருந்தபொழுது திருவானைக்காப் புராணமும் பூவாளூர்ப் புராணமும் மொழிபெயர்த்தருளினர்.

பின்னர் கொங்குநாட்டிலே விராட்புருடனுக்கு லிங்கஸ்தானமாகிய ஆதிபுரியென்னுந் திருப்பேரூரிற்கு எழுந்தருளி, ஆண்டு சின்னாள் வதிந்து பேரூர்ப்புராணம் மொழிபெயர்த்தருளினர்.

அதன்பின் திருத்தணிசென்று ஆங்குசிலகாலம் வீற்றிருந்து, இயற்றமிழ்ப் போதகாசிரியர் விசாகப் பெருமாளையர், வித்வான் சரவணப்பெருமாளையர் இருவருக்கும் பிதாவாகிய கந்தப்பையர் முதலாயினோர்க்குக் கல்வி கற்பித்தருளினர். அப்பொழுது அன்னோரும் அன்னோரன்ன பிறருந் தமிழிற்கு ஓர் புறச்சமயியாற் செய்யப்பட்ட சீவகசிந்தாமணியைப் பேரிலக்கியமாகக் கொண்டாடுதலைப் பார்த்துத் தமிழில் அவ்வித மாட்சிமை பொருந்திய இலக்கியம் பிறிதின்மையான் மனக்கவர்ச்சி யுடையராய், அக்குறையைத் தாமே முடித்தல் வேண்டுமென்று திருவுளத்தமைத்து இத்தணிகைப் புராணத்தை அருளிச்செய்தார். சொல்வளம் செய்யுணடை, சந்தம், பொருட்சுவை யென்றிவற்றித் தமிழுள்ள எந்த இலக்கியமும் இதற்குமேற்பட்டிலதென்பது இதனை வாசிப்போர்க்கு எளிதில் விளங்கும். சீவகசிந்தாமணியின் சந்தமும் வனப்பும் இதில் யாண்டுங்காணலாம்.

தம் மாணாக்கரிற் சிறந்தவராகிய கந்தப்பையருக்கு வயிற்றிலே ஓர் குன்மநோயுண்டு பட்டபொழுது தணிகையாற்றுப் படையைப்பாடி அவர் நோயை மாற்றி யருளினர். அதனால் அவர் எத்துணைச் சிவானுபூதிமானென்பது தெள்ளிதிற் புலப்படும். இவையன்றித் திருத்தணிகைப் பதிற்றுப்பத்தந்தாதியும் வேறுசில பிரபந்தங்களும் அங்கே இருந்தபொழுது இயற்றினர் பின்பு சென்னைமாநகர்க்குச் சென்று ஆங்குசிறிதுகாலம் வதிந்தார். அப்பொழுது அவ்விடத்துப் பக்தஜனங்களுட் பிரபுக்களாயுள்ளோர் பலரது வேண்டுகோட்கிசைந்து விநாயகபுராணமும் சென்னைவிநாயகர் பிள்ளைத்தமிழ் முதலியன இயற்றி, அவர்கள்

அடியுறையாக இரண்டாயிரம் வராகனிட அதைக்கொண்டு திருவாவடுதுறையில் ஆதீன பரமாசாரியராகிய ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள் சந்நிதி மண்டபப்பணி அணிபெறசெய்வித்தருளினர். விநாயகபுராணம் அரங்கேற்றிய சபைக்கு ஐயா பிள்ளை என்னும் ஒரு பெரிய பிரபு, தாம்வர இதென்ன இராமாயணமா என்று சற்றிகழ்ந்தனர். மற்றப் பிரபுக்கள் முனிவர்க்கு அதனை மறைத்தும், அவர் யாரும் பிரமிக்கத், தமது புராணத்தை ஆரம்பியாது, இராமாயணத்தை எடுத்துக்கொண்டு முதல் ஆறு செய்யுளில் நூறு குற்றம் ஏற்றினர். உடனே அப்பிரபு நூறு வராகனும் மிக யர்ந்த பட்டுவஸ்திராதிகளுங் கொண்டுபோய் பாதகாணிக்கையாக வைத்துத், தீர்க்க தண்டஞ்சமர்ப்பித்துத் தேவரீர் சுவாமிகள் மகத்துவம் அறியாத ஏழையை மன்னித்தருள்கவென்று விண்ணப்பஞ்செய்ய அதன்மேற் தமது புராணத்தை ஆரம்பித்து அரங்கேற்றினர்.

இம் முனிவர் சென்னபட்டினத்திலிருக்கும்போது காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருந்த அவராசிரியராகிய சிவஞானயோகிகள்பால் ஆங்குள்ள தமிழ்வித்வான்கள் ஒருங்குசேர்ந்து நீவிர் காஞ்சிமான்மியஞ் செய்யப்புகுந்து அதன்கட் கடவுள்வாழ்த்திற் "சங்கேந்து மலர்க் குடங்கைப் புத்தேளு மறைக்கோவுந் தழல்கால்சூல மங்கேந்து மம்மானுந் தத்தமது தொழிறலைநின்றாற்றச் செய்தோர் பங்கேந்தும் பெருமாட்டி விழிகளிப்பவிருமுனிவர் பணிந்துபோற்றக் கொங்கேந்து மணிமன்றுட் குனித்தருளும் பெருவாழ்வைக் குறித்து வாழ்வாம்" என்னுஞ் சபாநாயகர் துதியை முன்னர் அமைத்துத் "தணந்தபெருந் துயர்க்கடன் மீக்கூர்தலினூன் மலைபபந்த தாளமூரற் கனங்குழையாள் புரிபூசை முடிவளவுந் தரியாம லிடையே கம்பை யணங்கினைத் தூமதென விடுத்து வலிந்திவகத் தழீஇக்கொள்ள வமைபாக்காதன் மணந்தருளிக் குறிபூண்டவொரு மாவிற்பெருமானை வணக்கஞ்செய்வாம்" எனத் தலநாயகராகிய ஏகம்பநாதர் துதியைப் பின்னர்வைத்தது தவறென்று சாதித்தனர்.

(இன்னும் வரும்) மு. கா. நாகலிங்கம் ஆச்சாரி, கமுதி.

விளம்பரம்.

# தாருல் இஸ்லாம்

## இஃதோர் உயர்தர நூதன இஸ்லாமிய முதற்றர மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

தமிழ்நாட்டுச் சகோதர சகோதரிகாள்! "தாருல் இஸ்லாம்" இன்னதென்பதை இதுவரையில் நீங்கள் தெரிந்து கொண்டிருக்கிறீர்களா?

இஸ்லாத்தின் உண்மைக்கொள்கைகளை யெல்லாம் உள்ளபடியே நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டாமா? குர்ஆன் ஷரீபும் ஹதீதுஷரீபும் கூறப்பட்டிருப்பது இன்னதெனத்தெரிந்து கொள்ளவேண்டாமா? இஸ்லாத்திலுள்ள ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை இன்னதென அறிந்துகொள்ள வேண்டாமா? இஸ்லாத்தின் சமரசக்கொள்கை இன்னதென்பது உங்களுக்குத் தெரியுமா? இஸ்லாத்தின் தேசீய ராஜீய ஞானமும் இன்னதெனத் தெரிந்துகொள்ளவேண்டாமா? முஸ்லீம் உலகமுழுதும் நடைபெறும் முக்கியமான விஷயங்கள் இன்னவையென அறிந்து கொள்ள வேண்டாமா? இஸ்லாத்தில் இதுவரையில் தோன்றியுள்ள பெரியோர்களின் சரித்திரத்தையும் நீங்கள் படித்தறிய வேண்டாமா?

இவைகளெல்லாம் வேண்டுமாயின் எமது "தாருல்இஸ்லா"த்தைப் படியுங்கள். இதன் முதற்பக்கமுதல் இறுதிப்பக்கம் வரையில் அதிரஸமான அபூர்வவிஷயங்களே முழுதும் ததும்பிக் கிடக்கும். இஸ்லாத்தின் பக்தி மார்க்கமும், ஞான மார்க்கமும் இன்ன இன்னவை யென்பதையும் இதன் மூலம் செவ்வனே தெரிந்துகொள்வீர்கள்.

இதில் குர்ஆன்ஷரீபின் மொழிபெயர்ப்பும் இப்பொழுது தொடர்ச்சியாக வெளிவந்துகொண்டிருக்கிறது.

இதன் வருஷசந்தா ரூ. 3. வெளிநாட்டுக்கு ரூ. 4.

தனிப்பிரதி விலை அணா 5.

மாதிரி சஞ்சிகை வேண்டுவோர் 5 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

விலாசம்:—

மானேஜர், "தாருல் இஸ்லாம்" ஆபீஸ்,

16–17, ஸகின்டு லேன் பீச், மதராஸ்.

## விளம்பரம்.

### கதாரஞ்சனி.

நாவல் நிறைந்த மாத சஞ்சிகை. 1922ளு ஜனவரிமாத முதல் நடைபெறுகிறது. இதில் இனிய தமிழ் நாவல்களே வெளிவரும். தற்சமயம் அதியற்புதமாயுள்ள நாவல் எழுதப் பட்டு வருகிறது. வருட சந்தா 1—4—0 வெளிநாடு சந்தா 2—0—0. தனி காப்பி 0—2—0.

ஸ்ரீ வாணி விலாச லைபெரரி,
79, சுப்புராயசெட்டி வீதி, திருப்பாதிரிப்புலியூர்.

### கற்பகம்.

ஓர் செந்தமிழ் மாத சஞ்சிகை.

வருஷ சந்தா ரூ. 1—0—0. வெளி நாட்டிற்கு ரூ. 1—8—0

இதில் கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், கைத்தொழில், வேதாந்தம், இராஜாங்க ஜனங்க சீர்திருத்தங்கள், நூதன கற்பிதங்கள், மதவிஷயம், சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள், உலக அற்புதம், வர்த்தமானம், விநோதக்கூற்று முதலான அரும் விஷயங்களுடன் வெளிவருகிறது.

மானேஜர் கற்பகம் ஆபீஸ், புதுவை.

### ஆத்மசக்தி.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

ருத்திரோற்காரிளு ஆடிமீ முதல் வெளிவருவது. இலக்கிய இலக்கண ஆராய்ச்சிக்கான வியாசங்கள், வியாபாரம், கைத்தொழில், விவசாயம் இவற்றின் அநுபவங்கள், வேதாந்தம் இதிகாஸ புராணங்களின் நுட்பம், விகடத்திரட்டு, வைத்தியக் குறிப்பு, சிறு கதைகள், அரிய பெரிய நவீனகம் (நாவல்) தேசிய கீதங்கள், மாணவர் சிறுமியர்க்கான இன்ப உரைகள் முதலியவை பல அறிஞர்களால் செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு வெளிவரும். விஷயமனைத்தும் ஆடவர் பெண்பாலர் சிறுவர் அனைவருக்கும் பயன் தரக்கூடியன என்போம்.

பாரத புத்ரர்களும் "ஆத்ம சத்திக்குச்" சந்தாதாரர்களாய்ச் சேர்ந்தாதரிக்க வேண்டுகிறோம்.

| | |
|---|---|
| வருடசந்தா உள்ளூருக்கு (புதுவை) ரூ | 0–12—0 |
| வெளியூர்கட்கு | 1—0—0 |
| வெளி நாடுகளுக்கு | 1—4—0 |

மாதிரிப் பிரதி இனம்.

'ஆத்ம சக்தி' கார்யாலயம், புதுச்சேரி.

# விளம்பரம்.

## தேசானுகூலன்.

பினாங்கினின்று வாரம் ஒருமுறை வெளிவரும் அரிய தமிழ்ப் பத்திரிகை இப்பத்திரிகையின் அருமை பெருமைகளை வாங்கிப் படித்தாலன்றி எழுதவியலாது. வருடச்சந்தா 5.00 அல்லது ரூபா 8.

**மானேஜர் தேசானுகூலன், பினாங்கு.**

## தேசோபகாரி.

பர்மாவின் தலைநகரான ரங்கூனிலிருந்து ஞாயிறு தோறும் வெளிவரும் ஒரு சிறந்த வாரப்பத்திரிகை. சித்திரப் படங்களுடன் திகழ்வது. அரிய வியாசங்களைக் கொண்டது. தமிழர்களின் பொது நலத்திற்காக உழைப்பது.

வருஷ சந்தா உள்ளூருக்கு ரூ. 5. வெளியூருக்கு ரூ. 6.

**பத்திராதிபர் தேசோபகாரி, இரங்கூன்.**

## இந்துநேசன்.

சனிக்கிழமைதோறும் பிரசுரமாகும் வாராந்தத் தமிழ்ப் பத்திரிகை. இனிய வியாசங்களும் அரிய விஷயங்களும் அடங்கியிருக்கும்.

வருஷ சந்தா ரூ. 5—0—0. தனிப்பிரதி 0—2—0.

வேண்டுவோர் இவ்விலாசத்திற்கு எழுதிக்கொள்ளலாம்.

**மானேஜர் இந்துநேசன் ஆபீஸ்,**
65, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

## அகஸ்தியன்.

12 பத்திரிகைகளும் சேர்ந்த முதல் வால்யம்.

அகஸ்தியன் முதல் வருஷப் பத்திரிகைகள் தனித்தனியே அனுப்பவேண்டுமெனப் பலர் எழுதுகின்றனர். தனிப்பிரதிகள் செலவாகி விட்டமையால், புதிய சந்தா நேயர்களின் சௌகரியத்தைக் கருதி "நமது அகஸ்தியன் பத்திரிகை (முதலாவது வருஷச் சஞ்சிகைகள் 12-ம் ஒருங்கே சேர்த்து) பைண்டுசெய்து வைத்திருக்கிறோம்" சில நூறு புத்தகங்களே கைவசமிருப்பதால் வேண்டுவோர் முந்திக்கொள்ளுமாறு விஞ்ஞாபனஞ்செய்து கொள்ளுகிறோம். 5 பெரிய பிரசங்கங்களும் பல அரிய விஷயங்களும் 304 பக்கங்களுங் கொண்ட புத்தகம் 1 - க்கு விலை ரூ. 3—8—0. ☞ முன்பணம் அனுப்பவேண்டும்.

இரண்டாவது வருஷத்திற்கு சந்தாதாராகச் சேருங்கள்.

**மானேஜர் அகஸ்தியன் ஆபீஸ்,**
சதானந்தபுரம், கோட்டாரக்கரை. S. I. R.

# விளம்பரம்.

## "நியாயாபிமானி"

பிரதி புதவாரந்தோறும் பிரஞ்சிந்தியாவில் வெளியாகும்
ஓர் தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் வருஷ சந்தா ரூ. 4—0—0
அயல் நாடுகளுக்கு ரூ. 4—8—0

இதை ஒவ்வொரு தமிழரும் வாங்கிப்படித்துப் பயன்பெறுவார்களாக.

மானேஜர் :— நியாயாபிமானி,
காரைக்கால்.

## "ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்"

ஒரு ஆங்கில தமிழ் மாதப்பத்திரிகை. மாட்சிமை தங்கிய சென்னை கவர்னரவர்களின் மனைவியார் லேடி வில்லிங்டன் அவர்கள் தந்த உருவப்படத்தோடும், சுய லிகிதத்தோடும் ஒவ்வொரு மாதமும் பதினைந்தாம் தேதி வெளிவரும்.

பத்திராதிபர் டாக்டர் மிஸ்ஸிஸ் அன்னுதாமஸ் அம்மாள்.

வருஷ சந்தா ரூ 3. வெளி நாடுகளுக்கு ரூ. 4.

மானேஜர் :— ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்,
திருநெல்வேலி டவுன்.

## "லக்ஷ்மி"

[என்ற மாதப்பத்திரிகையை எல்லோரும் ஆதரியுங்கள்.]

எங்கள் "லக்ஷ்மி" சித்திரப்படங்களுடன்கூடிய பத்திரிகை. சிறந்த தமிழ் அறிஞர்கள் லக்ஷ்மியில் வியாசங்கள் எழுதுகிறார்கள். எல்லோரும் விரும்பும் பல நல்விஷயங்கள் லக்ஷ்மியில் வெளிவருகின்றன. உங்கள் வீட்டிற்கு நமது லக்ஷ்மியை வரவழையுங்கள். உங்கள் வீட்டில் எல்லோரும் லக்ஷ்மியை விரும்புவார்கள். லக்ஷ்மி உங்களைத் தேடிவருகின்றாள். அவளை அன்புடன் எதிர்கொண்டழையுங்கள். உடனே உங்கள் விலாசத்தைத் தெரிவியுங்கள். மாதிரிப் பிரதி இனமாக அனுப்புகிறோம். மாதிரிப் பிரதியைப் பார்வையிட்டபின் நீங்கள் சந்தாதாராவது நிச்சயம். உங்களுக்கு லக்ஷ்மி கடாக்ஷம் உண்டாவதாக.

வருட சந்தா ரூ. 2—0—0 வெளிநாட்டிற்கு ரூ. 2—8—0

மானேஜர் "லக்ஷ்மி" ஆபீஸ்,
தபால் பெட்டி 99, மதராஸ்.

### வேதாந்த பாஸ்கரன் இரண்டாம் பாகமாகிய

# ஞானக்களஞ்சியம்.

## செந்தமிழ்ச் செல்வர்காள்!

நமது முன்னோர்கள் பரம ரகசியமான யோக, ஞானமார்க்கங்களையும் இகர பார்க்கங்களையும் நாம் நன்மையடையும் பொருட்டுப் பல பாஷைகளிலும் பல முகாந்தரங்களுடன் எழுதி வைத்திருக்கிறார்கள். அவற்றுள் சில விஷயம் சிலருக்குத் தெரிந்தும் சில விஷயம் சிலருக்குத் தெரியாமலும் சிலர் அநுஷ்டானத்திற்கு கொணர்ந்தும் சிலர் முற்றிலும் கைவிட்டும் பல விதமாய் இன்னும் இரகசியமாகவே இருந்து வருகின்றனவென்பது யாவரும் நன்கறிந்ததோர்விஷயம்.

அதையுணர்ந்து எல்லோரும் எளிதில் வாசித்தறியும்படி இனிய மனோகரமான செந்தமிழ் வசனநடையில் "வேதாந்த பாஸ்கரன்" என்னும், நூலை வெளியிட அவை சொற்பகாலத்திலேயே செலவாகிவிட்டன. அதை வாசித்தவர்களெல்லாம் "இரண்டாம் பாகம்" எப்போது வெளிவரும்! எப்போது வெளிவரும்!! என்று கடிதமூலமாகவும் முகதாவிலும் கேட்டவண்ணமாகவே இருக்கிறார்கள். காகிதப்பஞ்சத்தின் கொடுமையாலும் ஒத்தாசைக் குறைவினாலும் இதுவரையிலும் அச்சிடாமலிருந்து இப்போது அச்சிட்டுவருகிறோம். ஆகையால் முன்னடியே ஒவ்வொரு அன்பர்களும் தங்கள் முழுவிலாசத்தையும் தெரிவித்தால் தயாரானவுடன் தபால்மூலமாய் அனுப்பப்பெறும். சொற்பப் பிரதிகளே அச்சிடுவதால் முந்துங்கள்! முந்துங்கள்!!

### விஷயங்கள்.

சாதன சதுட்டயம், பிரமசரியம், கிருகஸ்தம் வானப்பிரஸ்தம், சன்னியாசம் கனிதசன்னியாசம், குண்டலிசத்தியின் இலட்சணம், குண்டலியை விழிப்பிக்கும்வகை பஸ்திரிகை, புரியட்டகசரீரம், அட்டமாசித்திகள் அட்டமாசித்திகள் உண்டாவதின் காரணம், 'ஞானசத்தபூமிகள்' நான்கு பற்றின்மைகள், சம்பிரக்ஞாதசமாதி, அசம்பிரக்ஞாதசமாதி நான்குசீவன் முத்தர்கள், அபரோட்சஞானம், பரோட்சஞானம், மகான்கள் தெரிசனப் பலன், நவபுண்ணியம், கடவுளுக்கும் சீவன்முத்தர்களுக்குமுள்ள தாரதம்மியம், அடியாரிலக்கணம், அடியார் பொதுவிலக்கணம், சிறப்பிலக்கணம், புறத்திலக்கணம், உடலிலக்கணம், அகத்திலக்கணம் பல தீட்டுக்கோர் முழுக்கு, பரிகலச்சேடத்தின் பலன். அடியார்நிந்தை, சாதுசங்க விசாரணை, சாதிமதச்சங்கடம், ஆயுள்பரீட்சை, சங்கீதத்தின் பெருமை சங்கீதம்எதற்காக ஏற்பட்டதென்பதை பாடகர்கள் அவசியம் கவனிக்க வேண்டிய அநேக இலட்சணங்கள் வாலிபர்கள் விருத்தராய்ப்போவதின் காரணம், சமாதிக்கிரியை முதலான அநேக எண்ணிறந்த விஷயங்கள் நிரம்பப் பெற்றிருக்கின்றன. ஒவ்வொருதலைப்பின் கீழும் அநேக இந்து முகம்மதிய மகான்களின் சரித்திரங்களை திருஷ்டாந்த தாஷ்டாந்தங்களுடன் விளக்கியிருப்பதால் மனிதராகப் பிறந்தஒவ்வொருவரும் அவசியம் வாசிக்கவேண்டியது.

மானேஜர்:— ஞான சூரியன் ஆபீஸ்,

விஜயபுரம், திருவாரூர் S. I. Ry.

குருவில்லாமல் நூலைப்பார்த்தே அப்பியாசிக்கக்கூடிய

# யோகரகசியம்.

(வெளிப்படையாக எழுதப்பெற்றுள்ளது)

இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்களில் சிலவற்றை இங்குமாதிரிக்காக குறிப்பிடுகிறோம்.

## விஷயங்கள்.

இராஜயோகம், கவலையற்றவனே கனவான், மனோலயம், பிராணாயாம யோகம், இதுவரையிலும் எந்தநூலிலும் வெளியிடாத பரமரகசியமான பிராணாயாமயோகப்பிரிவு, எட்டுவகைப்பிராணாயாமம், அம்சகாயத்திரி, சோகப் பிரணவம், அப்பியாசம்செய்யுமிடம், அப்பியாசக்கணக்கு, அப்பியாச முறை, வமனம், விசர்க்கம், பிரமணம், நாசிபாவனம், குதக்கிரியை, உண்ணாக்கிரியை அப்பியாசகாலம், அப்பியாசக்குறிகள், சண்முகிமுத்திரை, மகாமுத்திரை, சாலந்திரபந்தம், உட்டியானபந்தம, மூலபந்தம், விபரீதகரணி, சாம்பவி முத்திரை, இலாஞ்சனை, கேசரிமுத்திரை, வஜ்ரோலிமுத்திரை; கபசுத்தி-கரிசாலைநெய், மூலசுத்தி—(எரண்டநெய்) கபமலநிவாரணம், பஞ்சகற்பம், மூதண்டக்கியாழம், தாம்பூலச்சுண்ணம், உப்புக்கட்டு, சூரியயோகம், சந்திரயோகம், காயகற்பம், மும்மூல அகக்கற்பம், கற்பம்உண்பதற்கங்கம், கற்பமுண்ணுங்காலம், பேரண்டகற்பம், கற்பமுண்ணுங்கால் அபத்தியம் நேரிட்டு வியாதிகள் கண்டால் அதற்கு இலகுவானவைத்திய முறைகள், போஜன நியமங்கள். யோகவிக்னங்கள், யோகப்பரீட்சை, சயனவிதி, கற்பசாதனைக்கிரமம் புறக்கற்பங்கள், அயக்காந்த செந்தூரம், கருப்புமூலிகைப்பயிர், கடுக்காய் கற்பம், காந்தகிண்ணம், பேய்த்தேற்றான்பாத்திரம், மிளகுகற்பம், தூதுவேளை கற்பம், சிந்திற்கற்பம், வேம்புக்கற்பம், கரிசாலைகற்பம், காரண்டக்கற்பம், கலை எருமைக்கற்பம், சர்க்கரைவேம்பு, செங்கற்றாழை, கிளிமூக்குமாங்காய், சாயாவிருட்சம், கருங்கடலாடிக்கற்பம், காமஞ்சரிக்கற்பம். காயசித்திபால் விருட்சங்கள், காயசித்தி மூலிகைகள், சுந்தரானந்தர் கேசரிகற்பம். சுப்பிரமணியர், பிரமகற்பம், பரியங்கயோகத்திற்கு வேண்டிய பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினி, ஆண் பெண் ஜாதிஇலட்சணங்கள், பெண்மான், பெண் குதிரை, பெண்யானை, முயல்சாதி, ரிஷபச்சாதி, குதிரைச்சாதி மாதர் ஆடவர்களின் இலட்சணங்கள், சமரசயோகம், உச்சயோகம், நீசயோகம், அதியுச்சாதி நீசயோகம், எழுவகை பருவப்பெண்கள் சையோககாலநிர்ணயம், அமிர்தநிலை முதலானவைகளும் அதற்குவேண்டிய சந்தனாதித்தைலம் சிறு சந்தனாதித்தைலம் மகா சந்தனாதித்தைலம் அயனவில்வாதித்தைலம் குமரித் தைலம், அருகம்வேர்தைலம் முக்கூட்டுநெய் முதலான சகலயோகங்களின் பரமரகசியங்களை கடல்மடை திறந்தாற்போல் வெளியிட்டிருக்கிறது. இந்நூலை வாசித்தவர்கள் பாக்கியம்தான் பெரும்பாக்கியம். இந்நூலை வாசிக்கக் கொடுத்துவைக்காதவர்கள் வாஸ்தவத்தில் துற்பாக்கியர்களே என்பது வாசித்த அப்பியாசிகளுக்கு வெள்ளிடைமலைபோல் விளங்கும்.

மானேஜர்:— ஞான சூரியன் ஆபீஸ்,

விஜயபுரம், திருவாரூர் (TIRUVALUR) S. I. Ry.